# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்
CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 6
செய்தி 08
ஜனவரி 2021
விலை ரூ 10/-




# ஒன்றுபட்ட போராட்டத்திற்கு பணிந்தது வாரியம்












# மின்கதிர்
## செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

விலை ரூ. 10/-
ஜனவரி

**உள்ளே....**


★ மாற்றத்தை நோக்கி பயணம்
★ சரித்திரம் படைத்த மின்வாரிய பணியாளர்களின் சாதனை போராட்டம்
★ மின்வாரியத்தில் கேங்மேன் பதவி நிரப்பிட வழக்கு தடையா?
★ தோல்வியடைந்த முதலாளித்துவ தத்துவம்
★ மின்வாரியத்தை தனியார் மயமாக்க முயற்சிக்கும் தமிழக அரசு
★ டெல்லி விவசாயிகளின் போராட்டம் மோடி ஆட்சிக்கு முடிவு கட்டும் போராட்டம்
★ கல்வி உதவி தொகையை தரமறுக்கும் மத்திய அரசு
★ போராட்டங்கள் நிறைந்த 2020 ஆம் ஆண்டு


**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**


முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம்
சென்னை 600 005.


# மாற்றத்தை நோக்கி பயணிப்போம்!



கடந்த 35 நாட்களுக்கும் மேலாக வீரஞ்செறிந்த போராட்டத்தை இந்திய விவசாயிகள் வேளாண் சட்டங்களை திரும்பப்பெறக்கோரியும், பொதுத்துறையாம் மின்துறையை நாசமாக்கும் மின்சார சட்டதிருத்த மசோதா 2020-ஐ கை விடக்கோரியும் போராடி வருவது இந்திய உழைப்பாளி மக்களுக்கு உத்வேகத்தையும், போராடும் குணத்தையும் உருவாக்கித் தந்துள்ளது.

நாட்டின் முதுகெலும்பான விவசாயத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக விவசாயிகளை பாதிக்கும் பொது மக்களை பாதிக்கும் மூன்று வேளாண் சட்டங்களை திரும்பபெற மறுக்கிறது. வேளாண் சட்டங்களை ரத்து செய்தால் தான் எங்களுக்கு புத்தாண்டு என்கிறார்கள் விவசாயிகள்.

இந்த போராட்ட களத்தில் இருபதுக்கும், மேற்பட்ட விவசாயிகள் தங்கள் இன்னுயிரை இழந்துள்ளனர். கடுங்குளிரிலும் கூட டில்லியில் தங்கள் வாழ்வாதாரத்திற்காக போராடும் இந்த விவசாயிகள் மின்துறையை பாதுகாக்கவும், குரல் எழுப்பி வருவது மின் ஊழியர் - விவசாயின் ஒற்றுமை பலப்படுத்துகின்ற வகையில் அமைந்துள்ளது.

ஆட்சி அதிகாரத்தில் உள்ள மத்திய பி.ஜே.பி. அரசு இந்த கொடிய கொரானா தொற்று காலத்தில் கூட லட்சக்கணக்கான மக்கள் டில்லியில் திரண்டிருப்பதை கண்டுங்கூட அசைய மறுக்காமல் இருப்பது, மக்களுக்காக பணியாற்றாத மனசாட்சி இல்லாத அரசாங்கமாகத்தான் உள்ளது.

விவசாயிகளின் இந்த போராட்டம் தற்போது மின்சார சட்ட திருத்த மசோதாவை நிறுத்தி வைத்துள்ளதாக மத்திய அரசு அறிவித் துள்ளதாக செய்திகள் வருகிறது. இது தற்காலிக வெற்றி என்றாலும் கார்ப்பரேட்டுக்கு அடி பணியும் இந்த அரசை நாம் நம்ப முடியாது.

தொழிலாளர்கள் நலன்களையும் அவைகளுக்காக பாடுபடும் தொழிற்சங்கங்களின் உரிமைகளையும் குழிதோண்டி புதைக்கின்ற நடவடிக்கைக்கு மத்திய பி.ஜே.பி. அரசு சென்று கொண்டிருக் கிறது.

தேசத்தின் பொதுத்துறைகளை அம்பானிக்கும், அதானிக்கும் தாரை வார்ப்பது தான் ஆகப் பெரும் லட்சியமாக மோடி அரசு நினைக்கிறது. பொதுத்துறைகளை பாதுகாப்பது தேசத்தின் மக்களுடைய, தொழிலாளர்களுடைய முக்கிய கடமை என அனைத்து உழைப்பாளிகளும் இந்த கொரானா தொற்று நோய் காலத்தில் போராடி வருகிறார்கள்.

தமிழக மின்வாரியத்தில், மின்சார சட்ட திருத்த மசோதா 2020-ல் சொல்லப்பட்ட பல்வேறு அம்சங்களை நிறைவேற்ற தனியார் மயத்தை நாட ஆளும் அதிமுக அரசு முடிவு செய்து அமலாக்க துடிக்கிறது. 5 துணை மின் நிலையங்களை பராமரிக்கவும், இயக்கவும்,உபகோட்ட அளவில் 50 சதவீதம் காலிப்பணியிடங்கள் இருந்தால் 20 பேரை Works Contract மூலம் வைத்துக் கொள்ளலாம் என முடிவு செய்து, அதற்கான உத்திரவுகளை பிறப்பித்தது.

பலமுறை மின்துறை அமைச்சரிடம் பேசியும் தீர்வு எட்டப்படாத நிலையில், தொழிலாளர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள் இணைந்து மிகப்பெரிய காத்திருப்பு போராட்டத்தை டிசம்பர் 21-ல் நடத்தி, அனைத்து அவுட்சோர்சிங் உத்திரவுகளை திரும்பபெற வேண்டும் என்ற ஒற்றைக் கோரிக்கையுடன் ஒற்றுமையாக போராடினார்கள்.

மின்துறை அமைச்சரை, வாரிய அதிகாரிகளை சந்திக்காமல் 5 துணை மின் நிலைய உத்திரவுகளையும், Works Contract முறையில் விநியோகப் பிரிவில் உபகோட்ட அளவில் 20 பேர்களை நியமிப்பது என்ற உத்திரவுகள் ரத்து செய்து அறிவிக்க வேண்டிய நிலையை, தமிழக அரசுக்கு உருவாக்கினோம் என்பது மிகப்பெரிய வரலாற்று சிறப்பு மிக்க வெற்றி.

இந்த புத்தாண்டை வரவேற்கும் அதே வேளையில், போராட்டமிக்க ஆண்டாக இந்த ஆண்டை மாற்ற வேண்டும். தேசநலனில் அக்கறையுள்ளவர்களை ஒன்றிணைப்போம். இணைந்து போராடுவோம்.

நவீன தாராளமய கொள்கையினால், பொதுத்துறையை தனியாருக்கு கொடுக்க நினைக்கும் ஆட்சியாளர்களுக்கு, பாடம் புகட்டுவோம்! அவர்களுக்கு புரியும் மொழியில்!



# சரித்திரம் படைத்த மின்வாரிய பணியாளர்களின் சாதனை போராட்டம்!



- எஸ்.இராஜேந்திரன்

தமிழக மின்வாரியத்தில் ஐந்து துணை மின் நிலையங்களை இரண்டாண்டுகளுக்கு பராமரிப்பதற்கும், இயக்குவற்கும் தனியாருக்கு தாரைவார்க்க முடிவு செய்து ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது. இது தொடர்பாக மின்வாரிய தலைவர் மற்றும் மாண்புமிகு மின்துறை அமைச்சரிடம் மத்திய அமைப்பு சார்பாகவும், தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு சார்பாகவும் பலமுறை பேசி இருந்தும் எவ்வித நடவடிக்கையும் தமிழக அரசால் எடுக்கப்பட வில்லை. மின்வாரிய தலைவரிடம் கடந்த 2020 டிசம்பர் 3-ந்தேதி பேச்சுவார்த்தை நடத்திய பொழுதும் தனியாரிடம் கொடுப் பதற்கான நியாயத்தை மட்டுமே வாரியத் தலைவர் மனதில் நிறுத்தி பேசினார்.

தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழலில் வாரிய உத்தரவு 82 நாள் 16.12.2020 மூலம் மின் விநியோக வட்டத்தில் உபகோட்ட அளவில் 50சதவீதத்திற்கு மேல் காலிப்பணி இடங்களாக உள்ள இடங்களில் அதாவது நிரந்தர தன்மை வாய்ந்த பணிகளில் ஒப்பந்த முறையை புகுத்துவதற்கு மறைமுகமான ஏற்பாட்டை மின்வாரிய நிர்வாகம் செய்ய முயற்சித்தது.

களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வுகளும், படித்த இளைஞர்களின் வேலை வாய்ப்பும், மின்வாரியத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றி வரும் ஒப்பந்த ஊழியர்கள் பணி நிரந்தரம் என்ற கனவும், கேங்மேன் தேர்வில் தேர்ச்சி பெற்று பணி நியமன உத்தரவை எதிர்ப்பார்த்திருக்கும், அந்த பணியாளர் களுடைய எதிர்பார்ப்பும் பறிபோகும் அவல நிலையை மின் ஊழியர் மத்திய அமைப்பு உணர்ந்து தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து போராட வேண்டிய நிலையை உருவாக்கினோம்.

**21.12.2020 - காத்திருக்கும் போராட்டம்**

தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு முடிவின் அடிப்படையில் அனைத்து அவுட் சோர்சிங் உத்தரவுகளையும், ரத்து செய்யக்கோரி 21.12.2020 அன்று அனைத்து மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பும், அதே போல சென்னை, மின்வாரிய தலைமையகம் முன்பும், காத்திருக்கும் போராட்டத்தை நடத்துவதற்கான முடிவு செய்து அனைத்து மின்வாரிய சங்கங்களின் கிளை மட்ட வரையிலான தலைவர்களுக்கும் தொலைபேசி வாயிலாக தகவல்கள் கொடுக்கப்பட்டு போராட்டத்தை ஒன்றிணைக் கப்பட்டது.

திட்டமிட்டவாறு 21.12.2020 அன்று அனைத்து மின்வாரிய மேற்பார்வை பொறி யாளர் அலுவலகம் முன்பும் (அனல், புனல் விநியோகம்) சென்னை மின்வாரிய தலைமை யகம் முன்பும் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் திரண்டனர்.

போராட்டத்தின் செய்தி அனைத்து தொலைக்காட்சியிலும், ஒளிபரப்பப்பட்டது.

போராட்டத்தின் தீவிரத்தை தமிழக அரசுக்கு உணர்த்தியது. மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் மின்வாரிய தலைமை அலுவலகத் திற்கு நேரடியாக பகல் 12.00 மணியளவில் வருகை தந்தார்கள்.

உடனடியாக மின்வாரிய ஆணை எண் 82-ஐ ரத்து செய்வதாக அறிவித்தார். அறிவிப்பு செய்த பின்பு தொழிற்சங்க தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைத்தார். தொழிற்சங்க தலைவர்களிடம் அமைச்சரின் அழைப்பை தெரிவித்த வாரிய அதிகாரியிடம் அனைத்து அவுட்சோர்சிங் உத்தரவுகளை ரத்து செய்தால் மட்டுமே பேச்சுவார்த்தைக்கு அதாவது நன்றி தெரிவிக்கின்ற வகையில் கலந்து கொள்வோம் என உறுதிபட தொழிற்சங்க கூட்டுக்குழு நடவடிக்கைக்குழுவின் சார்பாக தெரிவித்தோம்.

நண்பகல் 12.00 மணிக்கு மேல் பொறியாளர்களும், இந்த போராட்டத்தில் பங்கு பெற வேண்டிய புறச்சூழலும் உருவானது. அதன் பின் போராட்டத்தின் தன்மையை உணர்ந்த மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் 5 துணை மின் நிலையங்களை தனியார் பராமரிக்க விடப்பட்ட உத்தரவையும் ரத்து செய்வதாக அறிவித்தார். இருப்பினும் தொழிற்சங்க தலைவர்கள் ரத்து செய்த உத்தரவு கிடைக்கும் வரை கலைந்து செல்ல மாட்டோமென தொழிலாளர்களின் உணர்வு களோடுஉறுதியாக நின்றனர். இதனை அடுத்து ஐந்து துணை மின் நிலையங்கள் தனியாரிடம் பராமரிக்க கொடுக்கப்பட்ட உத்தரவுகளை ரத்து செய்து ஒரே உத்தரவாக வெளியிடப்பட்டது. உத்தரவுகள் கிடைக்கப்பெற்ற பின்பு மாலை சுமார் 6.00 மணியளவில் காத்திருப்பு போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

இந்த போராட்டத்தில் அண்ணா திமுக தொழிற்சங்க தோழர்களும், பி.எம்.எஸ் சங்க தோழர்களும் கலந்து கொண்டனர்.

தமிழகம் முழுவதும் இந்த வெற்றிச் செய்தியை பட்டாசு வெடித்து உற்சாகமாக கொண்டாடிநமது மின்வாரிய ஊழியர்கள், பொறியாளர்கள், கலைந்து சென்றனர். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற முதுமொழியை நாம் உறுதியாக கடைபிடித்து களத்தில் இறங்கிய விளைவு மூலம் கிடைத்த வெற்றி, தமிழக மின்வாரிய வரலாற்றில் தொழிற்சங்க வரலாற்றில் ஒற்றைக் கோரிக்கையை வைத்து அதிகாரிகளுடனோ மின்துறை அமைச்சருடனோ பேச்சுவார்த்தை நடத்தாமல் கிடைத்த வெற்றி. இந்த போராட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து தொழிற்சங்க தலைவர்களுக்கும், மின் ஊழியர்களுக்கும், பொறியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள், கிளை நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இணைந்து நிற்போம்!
ஒற்றுமையை கட்டுவோம்!!
மின்துறையை பாதுகாப்போம்!!!

## வடசென்னை அனல் மின்நிலையத்தில் விபத்து

வடசென்னை அனல் மின்நிலையத்தில் கன்வெயர் பெல்ட் அருகில் உள்ள நடைபாதை உடைந்து விழுந்ததில் மூன்று தொழிலாளர்கள் படுகாயம் அடைந்தனர்.

ஒப்பந்த நிறுவனத்தின் கீழ் பணிசெய்து வரும் ஒப்பந்த தொழிலாளர்கள் மேகநாதன் (வயது 36), கருணாகரன் (வயது 37), சிங்காரவேலு (வயது 27) ஆகியோர் 30 அடி உயரத்தில் இருந்து கீழே விழுந்தனர். ஆபத்தான சூழ்நிலையில் தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பல ஆண்டுகளாக முறையாக பராமரிக்காததின் விளைவு இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. மின்சார வாரிய நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு உயர்தர சிகிச்சை அளித்திட வேண்டும்.

மேலும் நிலக்கரி கொண்டு செல்லும் கன்வேயர் பெல்ட் அருகில் உள்ள நடைபாதையை முழுமையாக ஆய்வு செய்து சீர்செய்திட அனல் மின்நிலைய நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய அமைப்பு கேட்டுக் கொள்கிறது.

# விநியோக பகுதியில் உப கோட்ட அளவில் Works Contract விடுவதற்கான வாரிய உத்திரவு

**TAMIL NADU GENERATION & DISTRIBUTION CORPORATION LIMITED**

(A B S T R A C T)

TANGEDCO - Distribution Circle - Works Contract - to carry out the Maintenance Works of the Sub - Division in a Single Package through Open Tender System for the period of Three Years- Orders - Issued.

**( Administrative Branch)**

**(Per.) CMD TANGEDCO Proceedings No.82** **Dated : 16th December 2020**

Margazhi - 01, Saarvari Aandu.
Thiruvalluvar Aandu 2051.

**READ:-**

**Note approved by the CMD/TANGEDCO on 04.12.2020.**

**PROCEEDINGS:-**

In order to maintain uninterrupted power supply to the consumers and to improve the maintenance, Approval has been accorded to carry out the day to day Maintenance Works through Works Contract System on Open Tender in the Sub Divisions of Distribution Circles on a Single Package. The period of contract will be for Three Years with the provision to extend for further one year if mutually agreed with same terms and conditions. The tender will be sanctioned and awarded by the respective Superintending Engineer.

2) The Works Contract System could be executed, in accordance to the vacancies in the category of Field Assistant and Wireman.

(i) if the vacancy of the Field Assistant and Wireman in the Sub-Division are 50% and above, the works contract package would be awarded taking one Sub-Division as single package.

(ii) if the vacancy of the Field Assistant and Wireman in the Sub-Division are 25% and above, the works contract package would be awarded taking two such Sub-Divisions Combined togetheras single package.

(iii) And if the vacancy of the Field Assistant and Wireman in the Sub-Division is less than 25 %o (i.e., where 75% or more post are filled) the day to day works in respect of the Sections of such Sub-Divisions will be carry out only with the existing TANGEDCO RWE employees.

3) The estimated cost for the works contract to be executed in SubDivision wise package for the period of three years is Rs.1,80,88,000.00 (Rupees One Crore Eighty Lakh Eighty Eight Thousand only) inclusive of EPF, ESI Employer contribution, GST and overheads (Annexure-A) [(i.e.,) about Rs. 60,30,000.00 per year)

4) The contractor participating in the tender should submit the Demand Draft in favour of the respective Superintending Engineer for an amount of Rs.2.5 Lakhs (Rupees Two Lakhs Fifty Thousand Only) as Statutory Compliance Security Deposit (SCSD).

5) The contractor have to deploy minimum of 20 labourers for executing the works, the bill would claimed and paid based on the works in unit rate basis (Annexure-B).

6) In the case of Fatal Accident occurs during the course of employment for a worker engaged by the contractor, the contractor should pay Rs.5 Lakhs to the legal dependent on compensation grounds and could dlaim the same from the TANGEDCO.

7) The Superintending Engineer is empowered to extend work contract to another contractor executing the works contract under his jurisdiction on urgent/ emergency conditions, when a contractor/ employee of a particular work contract stops the works without sufficient notice period.

8) The common specification for the tender incorporating all conditions and clauses is communicated herewith.

9) The procedure as ordered above should be strictly followed without any deviation. The receipt of the proceedings should be acknowledged.

**( BY ORDER OF THE CMD / TANGEDCO )**

(D.RAVICHANDRAN)

CHIEF ENGINEER/PERSONNEL

---

## நமது போராட்டத்தின் விளைவாக விநியோக பகுதியை உபகோட்ட அளவில் Works Contract முறையை ரத்து செய்த வாரிய உத்திரவு

::TAMIL NADU GENERATION & DISTRIBUTION CORPORATION::

(ABSTRACT)

**TANGEDCO – Distribution Circle – Works Contract – to carry out the Maintenance Works of the Sub-Division in a Single Package through Open Tender System for the period of Three Years – Proceedings – Withdrawal of Orders.**

---

(Administrative Branch)

(Per.) CMD TANGEDCO Proceedings No:83, Dated the 21st December 2020.

Margazhi - 06, Saarvari Aandu.

Thiruvalluvar Aandu 2051.

READ :

(Per.) CMD TANGEDCO Proceedings No.82, (Administrative Branch) dated 16.12.2020.

* * * *

**PROCEEDINGS :**

The Proceedings issued vide reference cited, to carry out the Maintenance Works of the Sub-Division in a Single Package through Open Tender System for the period of Three Years in the Distribution Circle is hereby withdrawn.

(BY ORDER OF THE C.M.D / TANGEDCO)

21/12/2020

(D.RAVICHANDRAN)

CHIEF ENGINEER/PERSONNEL

# நமது போராட்டத்தின் விளைவாக 5 துணை மின்நிலையங்களை தனியாருக்கு கொடுத்ததை ரத்து செய்த வாரிய உத்திரவு

**TAMIL NADU TRANSMISSION CORPORATION LIMITED**
**ABSTRACT**

TANTRANSCO - System Operation/Chennai – Operation Circle– Proposal for entrusting day to day Operation, Maintenance & Emergency Breakdown at night and on holidays for two years under Works contract for the new 400 KV ,230 KV Substations – Administrative approval -Cancellation orders -Issued.

**TECHNICAL BRANCH**

(Per.) CH TANTRANSCO Proceedings No:170

Dated: 21.12.2020,
Margazhi - 06, Sarvari varudam,
Thiruvalluvar Aandu 2051

**READ:** Chairman's approval dated:21.12.2020.

**Ref:** 1. (Per.)CH TANTRANSCO Proceedings No.121, dt.12.08.2020
2.(Per.)CH TANTRANSCO Proceedings No.131, dt.27.08.2020
3.(Per.)CH TANTRANSCO Proceedings No.134, dt.21.09.2020
4.(Per.)CH TANTRANSCO Proceedings No.154, dt.03.11.2020
5.(Per.)CH TANTRANSCO Proceedings No.163, dt.01.12.2020

**PROCEEDINGS:**

The proceedings issued in the references cited from 1st to 5th above, for entrusting day to day Operation, Maintenance & Emergency Breakdown at night and on holidays for two years under Works contract at the following Substations are hereby withdrawn.

| Sl.No | Name of the SS | BP No. with Date |
|---|---|---|
| 1 | Sankarapuram 230 KV SS | (Per) CH TANTRANSCO Proceedings No.121, dt.12.08.2020 |
| 2. | Samayanallur 230 KV SS | (Per) CH TANTRANSCO Proceedings No.131, dt.27.08.2020 |
| 3. | TNEB Head Quarters 230 KV SS | (Per) CH TANTRANSCO Proceedings No.134, dt.21.09.2020 |
| 4. | Thirupattur 230 KV SS | (Per) CH TANTRANSCO Proceedings No.154, dt.03.11.2020 |
| 5. | Pulianthope 400 KV SS | (Per) CH TANTRANSCO Proceedings No.163, dt.01.12.2020 |

// BY ORDER OF THE CHAIRMAN //

S.Shanmugam
**DIRECTOR/ OPERATION(A/c)**
**TANTRANSCO**



# போராட்டக் களத்தில் மின்துறை அமைச்சரை ஏன் சந்திக்கவில்லை?

மின்வாரியத்திலுள்ள துணை மின் நிலையங்களை பராமரிக்கவும்,விநியோகப் பிரிவில் உபகோட்ட அளவில் ஒப்பந்தம் முறையில் பணிகளை விடுவதை திரும்பப்பெறக்கோரி 21.12.2020 அன்று நடைபெற்ற காத்திருப்பு போராட்டத்தில் மின்துறை அமைச்சர் தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தைக்கு அழைத்தும் வரவில்லை என வருத்தப்பட்டார்.

அமைச்சரின் வருத்தம் நியாயமானதாக பட்டாலும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களை மூன்று முறை நேரடியாக சந்தித்து தனியாரிடம் துணை மின் நிலையங்களை கொடுப்பது மின்வாரியம் தனியாரிடம் செல்லுவதற்கான நடவடிக்கை என கருதி தமிழக அரசுக்கு அவப்பெயரை உருவாக்கும் என தெரிவித்தும்எந்த நடவடிக்கையும் இதன் மீது எடுக்கப் படவில்லை.

மாறாக அமைச்சரிடம் பேச்சுவார்த்தை நடத்திய பின்பு சென்னை புளியந்தோப்பில் உள்ள துணை மின் நிலையத்தை தனியாருக்கு விடுகின்ற நடவடிக்கையை மின்வாரிய நிர்வாகம் எடுத்தது. இது அமைச்சருக்கு தெரிந்து எடுத்த முடிவா? தெரியாமல் எடுத்த முடிவா? என்ற விவாதத்திற்கு செல்ல வேண்டிய அவசியமில்லை.

அமைச்சரிடம் பேசியும் எந்த தீர்வும் ஏற்படாத நிலையில் விநியோக பிரிவில் உபகோட்ட அளவில் (Workers contract) ஒப்பந்த முறையில் வேலை என்ற உத்தரவை மின்வாரியம் வெளியிட்ட பின்பு களப்பிரிவு ஊழியர்கள், பொறியாளர்கள், மத்தியில் எழுப்பிய கோபத்தின் வெளிப்பாட்டின் காரணமாக உருவானதே 2020 டிசம்பர் 21-ல் நடைபெற்ற காத்திருப்பு போராட்டம்.

மின்துறை அமைச்சர் பேச்சுவார்த்தைக்கு அழைத்து சங்கங்கள் சென்றிருந்தால் வாரிய ஆணை 82-ஐ மட்டும் ரத்து செய்த அறிவிப்பை அறிவித்து நம்மை கலைந்து செல்லக் கூடிய சூழல் ஏற்பட்டிருக்கும். மின்துறை அமைச்சரிடத்தில் தொழிற்சங்கங்களுக்கும் கடந்த காலங்களில் நல்ல உறவு தான் இருந்து வந்தது. அதனால் இந்த போராட்டம் நடத்துவதில் காலதாமதம் ஏற்பட்டது.

அமைச்சர் கூறுவது போல தேர்தல் கால நிகழ்வையொட்டி நடத்திய போராட்டம் அல்ல. இது பொதுத்துறையாக மின்துறை நீடிக்க நடைபெற்ற போராட்டம். சரியான நேரத்தில் அமைச்சர் தலையீடு செய்து அவுட்சோர்சிங் உத்தரவுகளை ரத்து செய்ய மின்வாரிய தலைவருக்கு உத்தரவு இட்டது தான் சரியான நடவடிக்கை.

தமிழக அரசுக்கும், மாண்புமிகு மின்துறை அமைச்சருக்கம் வாரியத்தலைவர் மற்றும் அனைத்து உயர் அலுவலர்களுக்கும் மத்திய அமைப்பு சார்பாகவும், கூட்டு நடவடிகக்கைக்குழுவின் சார்பாகவும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

- எஸ்.இராஜேந்திரன்




# மின்வாரியத்தில் கேங்மேன் பதவி நிரப்பிட வழக்கு தடையா?



தமிழக மின்சார வாரியம் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுத்துறை நிறுவனம், சேவைத்துறை நிறுவனம், கடந்த 63 ஆண்டுகால வரலாற்றில் தமிழகத்தில் தொழிலில், விவசாயத்தில் ஒரு பெரும் மாற்றத்தை உருவாக்கியத்தில், மின்வாரியத்தில் பணியாற்றிய ஊழியர்கள், பொறியாளர்களுக்கு பெரும்பங்கு உண்டு எனில் அது மறுக்க முடியாது. மிகப்பெரிய அனல், புனல் மின் நிலையங்களையும் அணைக்கட்டுகளை கட்டுவதில் ஒன்றிணைந்த மலபார் மாநில தொழிலாளர்களின் பங்கு அளப்பறியது. அரசுகள் நிதி ஒதுக்கி இருக்கலாம். ஆனால் தலைமுறை தலைமுறையாக இருக்க வேண்டும் என நிர்மான பணியை மேற் கொண்டவர்கள் மின்வாரிய பணியாளர்கள்.

அரசின் இந்த கேந்திரமான துறையில் கடந்த 63 ஆண்டுகளில் பல்வேறு கால கட்டங்களில் பணியாற்றிய ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரப்படுத்த சங்கங்கள் கோரிக்கை வைத்து போராடி நிரந்தரப்படுத்திய வரலாறுகள் ஏராளம்.

தொழிற்தகராறு சட்டம் இருக்கக்கூடிய ஒரு துறையில் புதிதாக ஒரு பதவி உருவாக்க வேண்டுமெனில் தொழிற்சங்கங்களுக்கு 9A நோட்டீஸ், தொழிற்தகராறு சட்டத்தின் படி தொழிற்சங்கங்களுக்கு அளித்திருக்க வேண்டும். ஆனால் கேங்மேன் பதவி உருவாக்கப்பட்ட பொழுது அவ்வாறு எந்த அறிவிக்கையும் வாரியத்தால் தொழிற்சங்கங்களுக்கு வழங்கப் படவில்லை.

அறிவிக்கப்பட்ட இந்த உத்திரவில் களப்பணியில் மூன்றண்டுகளுக்கு மேல் காலியாக உள்ள 5000 பதவிகள் ஒழிக்கப்படும் என சரத்து இருந்த காரணத்தாலும், ஒக்கி, கஜா, சென்னை வெள்ளம் போன்ற சமீபத்திய இயற்கை பேரிடர் காலத்தில், நிவாரண பணிகளில் ஈடுபட்ட ஒப்பந்த ஊழியர்களை பணியிடங்களில் சந்தித்த மின்துறை அமைச்சர் விரைவில் அவர்களை நிரந்தரப் படுத்துகிறேன் என தெரிவித்து அதன் மீது எந்த நடவடிக்கை எடுக்காத காரணத்தால் தான் நீதிமன்றத்தை நாடவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

தற்போது மின்வாரியம் நீதிமன்றத்தில் அறிவுரை பெற்று 14954 பேர்களை கேங்மேன் பதவிக்கு தேர்வு செய்து இதில் 10,000 பேரை நிரப்புவதாக அறிவித்துள்ளது. ஆனால் தேர்ச்சி பட்டியல் வெளியிட்டு பணி நியமன ஆணை வழங்காமல் காலம் தாழ்த்தி வருகிறது.

நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த பொழுதே, கேங்மேன் பதவிகளை நிரப்ப நடவடிக்கை எடுத்த தமிழக அரசும்,மின்வாரிய நிர்வாகமும் தற்போது தொழிற்சங்கங்களின்

வழக்கை காரணம் காட்டுவது சரியல்ல. கடந்த காலங்களில் வழக்குகள் நிலுவையில் இருக்கின்ற பொழுது, பல்வேறு நியமன உத்திரவுகளை, சம்மந்தப்பட்ட வழக்கின் இறுதி தீர்ப்புக்கு கட்டுப்படும் என்ற கட்டளையுடன் நியமன உத்திரவுகளை வாரியம் வழங்கியுள்ளதை நினைவுப்படுத்த விரும்புகிறோம்.

உண்மையிலேயே இந்த பதவிகளை நிரப்ப மின்வாரியம் நிர்வாகத்திற்கும், அரசுக்கும் மனமில்லை. அதனால் தான் வாரிய உத்தரவு 82-ஐ பிறப்பித்து, உபகோட்ட அளவில் 50 சதவீதத்திற்கு மேல் காலியுள்ள இடங்களை Works Contract என்ற பெயரில் ஒப்பந்த முறையில் வாரிய பணிகளை செய்திட உத்தரவிட்டதின் நோக்கத்திலிருந்தே புரிந்து கொள்ளலாம். இந்த உத்திரவை தான் தொழிற்சங்கங்கள் கடந்த டிசம்பர் 21-ந்தேதி போராடி ரத்து செய்ய வைத்துள்ளோம். இதன் மூலம் தான் கேங்மேன்,ஒப்பந்த ஊழியர் மற்றும் ITI படித்தவர்களை நிரப்புவதில் தடையை விலக்க முடிந்தது.

களப்பிரிவில் 23,000 களஉதவியாளர்களும், 8000-க்கும் மேற்பட்ட கம்பியாளர் பதவிகளும் காலி பணி இடங்களாக உள்ள நிலையில் கேங்மேன் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட அனைவருக்கும் பணி நியமன உத்தரவு வழங்கிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

எனவே மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தொழிற்சங்கங்களின் வழக்கை காரணம் கட்டாமல் கடந்த காலங்களில் வழக்கு நிலுவையில் உள்ள பொழுது நியமனம் செய்யப்பட்ட உத்திரவுகளை கணக்கில் கொண்டும் கேங்மேன் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டவருக்கும் நியமன உத்திரவு வழங்கிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.



## திருவண்ணாமலை கிளையில் மத்திய அமைப்பின் பொன்விழா - கல்வெட்டு திறப்பு

திருவண்ணாமலை வட்டத்தில் மேற்கு கோட்டத்திற்கு உட்பட்ட வாணாபுரம் பிரிவு கொட்டையூர் 33/11 கே.வி. துணை மின்நிலையம் முன்பும், தண்டராம்பட்டு வடக்கு, தெற்கு பிரிவு அலுவலகங்கள் முன்பும் 23.12.2020 அன்று கோட்ட தலைவர் தோழர் கே. மணி தலைமையில் மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் எஸ். ராஜேந்திரன் கலந்து கொண்டு கல்வெட்டை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். மண்டல செயலாளர் ஆர். சிவராஜ் கொடியேற்றி வைத்தார், மாநில செயலாளரும் கிளையின் தலைவருமான தோழர் கே. காங்கேயன் வட்ட செயலாளர் தோழர் மு. பாலாஜி, வட்ட பொருளாளர் தோழர் வி.எம். வெங்கடேசன் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் ஆ. பெருமாள் மற்றும் எஸ். ரவி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். கோட்ட செயலாளர் தோழர் ஆ. குருதேவன் அனைவரையும் வரவேற்றார். தோழர் சிவகுமார் ரமேஷ் நன்றி கூறினார்.

# கேங்மேன் பதவிக்கு தேர்ச்சி பெற்றவர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கிட வாரியத்திற்கு அளித்த கடிதம்

நாள்: 02.01.2021

பெறுநர்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,

144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா,

வணக்கம்

பொருள் : **கேங்மேன் பதவி பணி நியமன உத்திரவு வழங்குவது - தொடர்பாக**

பார்வை : 1. (Per) CMD TANGEDCO Proceedings No.8 dated 02.03.2019

2. Memo (Per) No.21170/A22A / A 222 / 2020-1 dated 09.07.2020

பார்வையில் கண்ட வாரிய ஆணையின் மூலம் 5000 கேங்மேன் பதவிகள் தொழிற்தகராறு சட்டம் 1947-ன்படி தொழிற்சங்கங்களுக்கு 9(A) அறிவிக்கை கொடுக்காமலும் கலந்து ஆலோசிக்காமலும் உருவாக்கப்பட்டது. மேலும் 5000 கேங்மேன் பதவிகள் உருவாக்கும் பொழுது அதற்கு சமமான எண்ணிக்கையில் களப்பிரிவில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் காலியாக உள்ள பதவிகள் ஒழிக்கப்படும் என்ற ஷரத்தும் இடம் பெற்று இருந்தது.

இந்த காரணங்களால், தொழிற்சங்கங்கள் நீதிமன்றத்தை நாட வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் தற்போது பார்வை (2)-ல் கண்ட வாரிய குறிப்பாணையின் மூலம் களப்பிரிவில் 5000 பதவிகள் ஒழிக்கப்படும் என்ற ஷரத்து ரத்து செய்யப்பட்டுள்ளது.

தற்போது மின்வாரியம் நீதிமன்றத்தில் அறிவுரை பெற்று 14954 பேர்களை கேங்மேன் பதவிக்கு தேர்வு செய்து இதில் 10,000 பேரை நிரப்புவதாக அறிவித்துள்ளது. ஆனால் தேர்ச்சி பட்டியல் வெளியிட்டு பணி நியமன ஆணை வழங்காமல் காலம் தாழ்த்தி வருகிறது.

எனவே தற்போதைய களச்சூழலை கணக்கில் கொண்டு கீழ்கண்ட நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. களப்பிரிவில் 23,000 களஉதவியாளர்களும், 8000-க்கும் மேற்பட்ட கம்பியாளர் பதவிகளும் காலி பணி இடங்களாக உள்ள நிலையில் கேங்மேன் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட அனைவருக்கும் பணி நியமன உத்தரவு வழங்கிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

2. அதற்கு பின்பும் களஉதவியாளர் பதவிகள் காலிப்பணியிடங்களாக உள்ள நிலையில், மீதமுள்ள விநியோகம், அனல்,புனல், பொதுக்கட்டுமான வட்டம் ஆகியவற்றில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களை அடையாளங்கண்டு கடந்த 22.02.2018 ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரூ.380/- தினக்கூலியாக வழங்கிட வேண்டும். ஒப்பந்த ஊழியர்களை உடனடியாக நிரந்திரப்படுத்திட வேண்டும்.

மேலும் தற்பொழுது வாரியம் வெளியிட்ட உத்திரவின் அடிப்படையில் சென்னை உள்ளிட்ட மாநகராட்சி பகுதிகளில் ரூ.456/- இதரப்பகுதிகளில் ரூ.412/- தினக்கூலியாக வழங்க வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறோம்.

3. மேலும் 2900 ITI படித்தவர்களை நியமனம் செய்யப் போவதாக பல கட்டங்களாக அறிவிப்பு செய்து கடந்த மார்ச் 2020-ல் அறிவிக்கை ( Notification) வெளியிடப்பட்டது. கொரானா தொற்று நோய் காரணமாக நிறுத்தி வைத்துள்ளதாக அறிவிக்கப்பட்ட இந்த களஉதவியாளர் பதவிகளுக்கு இவர்களையும் தேர்வு செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

எனவே தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் எங்கள் கோரிக்கையின் மீது உரிய நடவடிக்கை எடுத்து கேங்மேன், பதவிக்கு தேர்ச்சி பெற்றவர்களுக்கு பணி நியமன உத்திரவு வழங்கிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**

பொதுச் செயலாளர்

# தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்! என்றான் பாரதி

இந்திய நாட்டின் பல்லாயிரக்கணக்கான உழைப்பாளி மக்கள் இந்த கொடிய கொரானா தொற்று நோய் பரவல் காலத்தில் தங்கள் வாழ்வாதாரத்தை தொலைத்து வருகிறார்கள். அன்றாடங்காய்ச்சிகளாக இருந்த மக்கள் பலர் நகரப்புறத்திலிருந்து கிராமப்புறத்துக்கு செல்லும் அவலநிலை. கடன் வாங்கிய பணத்திற்கு வட்டி செலுத்த முடியாமல் சொத்தை விற்பதும், தற்கொலை செய்வதும் தொடர் கதைகளாக பத்திரிக்கையின் செய்தியில்

முறைச்சாரா தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சமாக ஊரடங்கு காலத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.7500/- வழங்குவதற்கு மத்திய அரசிற்கு மனமில்லை, 100 நாள் வேலை திட்டத்தில் பணியாற்றியவர்களுக்கு உதவிக்கரம் நீட்டவும் மத்திய மாநில அரசுகளுக்கு மனமும் இல்லை.

ஆனால் மத்திய அரசாங்கம் புது டெல்லியில் புதிய நாடாளுமன்றம் கட்ட ரூ.971/- கோடியை ஒதுக்கீடு செய்து கட்டிடம் கட்ட தீர்மானித்துள்ளது. உச்சநீதி மன்றம் தடை விதித்தாலும் அடிக்கல் நாட்டலாம் என அனுமதி அளித்த காரணத்தால் டிசம்பர் மாதம் 10-ந்தேதி அடிக்கல் நாட்டினார். பிரதமர் மோடி ஏற்கனவே பட்டேல் சிலைக்கு ரூ.3000/- கோடி செலவு செய்துள்ளது.

படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்காமல் இருக்கும் பொதுத்துறைகளையும் கார்ப்பரேட்டுகளுக்கு கொடுப்பதற்கு வெட்கப்படாமல் செயலாற்றி வருகிறது. இவ்வாறு பெருமுதலாளிகளுக்கு வாரிக்கொடுத்த பணமெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க பயன்படுத்துகிறார்ள்.

இந்த தேசத்தின் உழைப்பாளிகளும், விவசாயிகளும் ஓரணியில் திரண்டு பொது மக்களோடு இணைவோம்! மாற்றத்தை நோக்கி பயணிப்போம்!

# ஒப்பந்த ஊழியரை அடையாளம் காண அமைக்கப்பட்ட கமிட்டி தொடர்பான வாரிய உத்திரவை ரத்து செய்ததை கைவிடக் கோரி வாரியத் தலைவருக்கு கடிதம்

பெறுநர் நாள்: **18.12.2020**

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா,

வணக்கம்

பொருள் : மின்வாரியம் - வாரிய ஆணை (Per) B.P(Ch) No.9 (Adm. Branch) dated 09.01.2008 - ரத்து செய்து பிறப்பித்த உத்திரவை ரத்து செய்ய கோருதல் - தொடர்பாக

பார்வை : (Per) CMD TANGEDCO Proceedings No.79 dated 07.12.2020

தமிழக மின்வாரியத்தில் ஒப்பந்த ஊழியர்கள் பல ஆண்டுகளாக பணிபுரிந்து வந்தனர். தற்பொழுதும் பணி செய்து கொண்டிருக்கிறார்கள். 1972-லிருந்து வாரிய நிர்வாகமும் தமிழக அரசும் படிப்படியாக இவர்களை நிரந்தரப்படுத்தி வந்தனர். 1989-ல் நிர்வாகம் அடுத்த கட்டபணியாளர்களை நிரந்தரம் செய்ய மறுத்த பொழுது எங்களது தொழிற்சங்கம் உச்சநீதிமன்றம் வரை சென்றது. உச்சநீதி மன்றம் நீதிபதி காலித் என்ற நீதிபதியை நியமித்து தீர்வு காண அறிவுறுத்தியது. அதனடிப்படையில் நீதிபதி காலித் அவர்கள் விசாரணை நடத்தி 18,006 பேரை நியமனம் செய்ய உத்ததிரவிட்டார். அதனடிப்படையில் 18,006 பேர் நிரந்தரம் செய்யப்பட்டனர்.

மேலும் அனல் நிலையத்தில் பணியாற்றும் 8500-க்கும் மேற்பட்ட ஒப்பந்த ஊழியர்களையும் நிரந்தரம் செய்யப்பட்டனர். இதனையடுத்து பல ஆண்டுகளாக வாரியம் ஒப்பந்த ஊழியர்கள் பணியாற்றி வருவதை உறுதி செய்து அவர்களுக்கு தீபாவளி பண்டிகை கருணைத்தொகை வழங்கி வந்தது.

இவர்களை கடந்த 2005-ல் நடைபெற்ற போராட்டத்தையடுத்து 10.08.2007-ல் தொழிற்சங்கங்களுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி 21600 பேர் படிப்படியாக நிரந்தரம் செய்யப்பட்டனர். அதன் பின் கருணைத்தொகை பெறும் விடுபட்டவர்களை அடையாளம் காண (Per) B.P(Ch) No.9 dated 09.01.2008-ன் மூலம் ஐவர் குழு கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டு வழிகாட்டப்பட்டது. அந்த கமிட்டியின் பரிந்துறை அடிப்படையில் 4263 பேர் அடையாளம் காணப்பட்டு தினக்கூலி தொழிலாளர்களாக (TCL) தேவைக்கேற்ப (Need Basis) பணியமர்த்தப்பட்டனர்.

அதன் பின் 09.01.2014-ல் நடைபெற்ற ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையில் ரூ.250/- தினக்கூலியை வழங்க முத்தரப்பு ஒப்பந்தம் காணப்பட்டது. அதனையடுத்து கடந்த 22.02.2018-ல் நடைபெற்ற ஊதிய உயர்வுக்கான முத்தரப்பு ஒப்பந்தத்தில் ரூ.250/-லிருந்து ரூ.380/- உயர்த்தப்பட்டது. வாரிய தரப்பிலிருந்து பலகட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்த ஊழியர்களை அடையாளம் கண்டு நிரந்தரப்படுத்த ஆவண செய்கிறோம் என்ற பதில்கள் தான் இதுவரை பெறப்பட்டு வந்தன.

21600 ஒப்பந்த ஊழியர்களை அடையாளம் கண்டு நிரந்தரப்படுத்தியபொழுது, பல்வேறு காரணங்களால் விடுபட்டவர்களை அடையாளம் காணத்தான், இந்த வாரிய உத்திரவு 9 நாள் 09.01.2008-ல் வழங்கப்பட்டது. இதிலும் விடுபட்டவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து வழக்கு நிலுவையில் உள்ள பொழுது, வாரிய உத்தரவு எண் 9 நாள் 09.01.2008 ரத்து செய்வது இயற்கை நீதிக்கு முரணானதாகும்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்கள், வாரிய உத்திரவு எண்.9 நாள் 09.01.2008 ரத்து செய்து பிறப்பித்த உத்திரவை ரத்து செய்யுமாறு கேட்டுக்கொள்கிறாம்.

தங்கள் உண்மையுள்ள
(எஸ்.இராஜேந்திரன்)
பொதுச் செயலாளர்





- தி. ஜெயசங்கர்

# தோல்வியடைந்த முதலாளித்துவ தத்துவம்

ஆண்டின் துவக்கத்தில் வைரஸ் பெருந்தொற்றால் இந்த உலகமே பாதிப்பில் உடைந்தது. டிசம்பர் 2019 ஆம் ஆண்டு சீனாவின் யூகான் மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கொரானா வைரஸ் (Covid 19) உலகம் முழுவதும் காட்டுத்தீயாய் பரவியது. இந்தியாவில் மார்ச் 24-நதேதியிலிருந்து ஊரடங்கு பிறப்பிக்கப் பட்டது. ஜனவரி 2021 வரை அது தொடர்ந்து நீடிக்கிறது. உலகம் முழுவதும் பல்வேறு காலங்களில் பல்வேறு வகையான பெருந்தொற்று ஏற்பட்ட போதெல்லாம் இவ்வளவு மாதங்கள் (Lock Down) ஊரடங்கு செய்ததில்லை. சுமார் 10 லட்சம் பேர் இந்த பெருந்தொற்றால் உயிர் இழந்துள்ளனர். இந்த எண்ணிக்கை என்பது இரண்டாம் உலகப்போரில் உயிர் இழந்தோரின் எண்ணிக்கை யைவிட அதிகம். இன்று வரை இந்த நோய்க்கான மருந்து கண்டு பிடிக்கவில்லை. எல்லாம் ஆய்விலேயே ( Research ) உள்ளது. இதனால் மக்கள் வெளியே வரமுடியாமல் வீட்டிற்குள்ளேயே முடங்கி உள்ளனர். குழந்தைகளின் கல்வி, மாணவர்களின் மேல்படிப்பு எல்லாம் முழுவதுமாக மாறுபட்டு (Online) இணைய வழி கல்வியாக உருமாறிள்ளது.

உலக நாடுகள் அனைத்தும் இதை எதிர்கொள்வதற்கு பல்வேறு வகையான திட்டங்களை அறிவித்துள்ளது. தொழில்கள் முடங்கியதால் தொழில் வளர்வதற்கான நிதிஉதவி திட்டங்களை அறிவித்தது. மக்களுக்கு வேலை இல்லாததால் ஒவ்வொரு மாதமும் அரசே நிதிஉதவி செய்து வருகிறது. இந்தியாவில் மட்டும் தான் உழைப்பாளி மக்களுக்கு, முறைசாரா அன்றாடங்காய்ச்சிகளுக்கு எந்த நிதி உதவியும் அரசுகள் கொடுக்கவில்லை. இந்திய மக்கள் தொகையில் 93 சதமான முறைசாரா தொழிலாளர்கள் நிலையற்ற வேலை செய்து வருமானம் ஈட்டி வருகின்றனர். அவர்களுக்கு தற்போது வேலையும் இல்லை, ஊதியமும் இல்லை. பசியோடும், பட்டினியோடும் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஊரடங்கு காலத்தில் வெளிமாநிலத் தொழிலாளர்கள் தனது சொந்த மாநிலத்திற்கு செல்ல முடியாமல் பலநாட்கள் கழிந்த பிறகு நடந்தே ஊருக்கு செல்வது என்று முடிவு எடுத்து சாலைகளில் குழந்தை குட்டிகளோடு காலில் செருப்பு இல்லாமல் நடந்து சென்றது மத்திய அரசு மக்கள் மீது வைத்திருந்த கருணையற்ற தன்மையை காட்டுவதாக அமைந்தது

சுதந்திரம் பெறுவதற்கு முன்பு எப்படி வறுமை நிலையில் வாழ்ந்தார்களோ, அதே போல் இன்றும் பல கோடி மக்கள் வறுமையில் வாழ்ந்து வருவதை ஊரடங்கு காலம் படம்பிடித்து காட்டியது. இந்தியாவிற்கு பிறகு சுதந்திரம் பெற்ற பலநாடுகள் மற்றும் கடைசியாக சுதந்திரம் பெற்ற சூடான் நாடு உட்பட வறுமைக்கோடு என்ற பட்டியலில் நம்மைவிட முன்னேறியுள்ளனர். நாம் மட்டுமே மிகப்பெரிய அளவில் பின் தங்கி உள்ளோம். வறுமை என்பது கொடுமையான நோய். கண்ணுக்கு தெரியாத வைரஸ் கிருமிகளை

விட கண்ணிலே நிற்கும் வறுமை என்பது மிகப்பெரிய கொடிய நோய். பிரிட்டிஷாரிடம் இருந்து சுதந்திரம் பெற்று விட்டால் வறுமையை விரட்டியே திருவோம் என்று சொன்னவர்கள், வீரவசனம் பேசியவர்கள் மாண்டு போனார்கள். வறுமை மாண்டு போகவில்லை. இந்தியாவின் உயிர்தொழில் விவசாயம். அந்த விவசாய தொழிலில் ஈடுபடும் விவசாயிகள் வறுமை காரணமாக வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட முடியாமல், ஆண்டுக்கு 2,50,000 விவசாயிகள் உயிர் இழக்கின்றனர். விவசாயத்தில் இலாபம் இல்லை. விவசாயம் செய்ய ஆற்று நீர்ப்பாசனமோ, கிணற்று நீர்பாசனமோ இல்லாமல் இருக்கும் விவசாயிகளின் எண்ணிக்கையோ பல லட்சங்கள். அதே நேரம் விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்கள் மூலமாக இந்திய பொருளாதாரத்தின் (GDP) என்பது பெருபாண்மை சதமாக உள்ளது. வேலை வாய்ப்பு என்பதும் இதன் மூலமாக அதிகமாக உள்ளது. விவசாயிகளின் விலை பொருட்கள் தான் இந்திய பொருளாதாரத்தை வலிமையாக வைத்துக்கொள்வது மட்டுமல்ல, இந்திய மக்களுடைய பசியை போக்கும் மாமருந்தாக உள்ளது. இவ்வளவு பெருமைகளை விவசாயிகள் பெற்றிருந்தும் கூட அவர்களின் வாழ்க்கையில் இன்று வரை எந்த முன்னேற்றமும் இல்லை என்பது ஆட்சியாளர்களின் கவனக்குறைவு என்று சொல்ல முடியாது, வரலாற்று பிழை என்றே சொல்ல வேண்டும். இவர்கள் செய்த பிழையின் காரணமாக 73 ஆண்டுகளாக விவசாயிகளின் வேதனை தொடர்கிறது. நகர்புற ஏழைகளின் வறுமை தொடர்கிறது. ஏழ்மையும் வறுமையும் தொடர்கின்ற போது அதன் விளைவுகளால் குற்றப்பின்னணியுடன் கூடிய ஒரு சமூகத்தை உருவாக்கியுள்ளது. வாழ்ந்தே ஆக வேண்டும் என்ற நியதிக்கு முன்னால் நீதியும் நேர்மையும் சட்டமும், காவலும் அவர்கள் கண் முன்னே தெரிவதில்லை.

ஆட்சியாளர்களின் முதல் கடமை வறுமை ஒழிப்பு என்பது, வறுமை ஒழிப்புக்கு பல வகையான நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவையும் உள்ளது. இதனை கூர்ந்து நோக்கி அளவீடு செய்து அரசின் தலையாய பணியாக சுதந்திரம் பெற்ற பிறகு வந்த அரசுகள் செய்திருந்தால் வறுமை ஒழிப்புப்பற்றி பேச வேண்டிய அவசியம் இல்லை. சுதந்திரம் பெற்ற பிறகு டெல்லியில் உள்ள பிர்லா மாளிகையில் இந்திய பணக்காரர்கள், இந்தியாவில் உள்ள தொழில்களை செய்வது தொடர்பாக கலந்துரை யாடினார்கள். இந்தியாவில் உள்ள செல்வங்கள் மீது தொழில்கள் மீது ஆட்சியாளர்கள் காட்டிய அக்கறை போலவே வறுமை ஒழிப்புக்கும் அம்பேத்கர் தலைமையில் தேசத்தின் மீது பற்றுகொண்ட பலரை இணைத்து வறுமை ஒழிப்பு தொடர்பாக உரையாடி இருந்தால், திட்டங்கள் தீட்டியிருந்தால், அரசு இதுதான் என் முதல் கடமை என்று எண்ணி இருந்தால் இன்று இந்தியா பலமடங்கு முன்னேறியிருக்கும். அமெரிக்காவை விட மூன்று மடங்கு விஞ்ஞான வளர்ச்சியிலும், பொருளாதார வளர்ச்சியிலும் முன்னேறியிருக்கும். செய்யத் தவறியது முதலாளித்துவ சிந்தனை கொண்ட ஆட்சியாளர்கள். முதலாளித்துவமே சிறந்த பாதை என்று ஆட்சி செய்த ஆட்சியாளர்கள். இந்த முதலாளித்துவ பாதையின் மூலம் வறுமையை ஒழிக்க முடியவில்லை, அனை வருக்கும் கல்வி தர முடியவில்லை, ஏற்றத் தாழ்வான சமூகத்தை மாற்றியமைக்க முடிய வில்லை, ஜாதி மத பிற்போக்கு தனத்தை கட்டுக் குள் கொண்டு வர முடியவில்லை, என்று இவர்களின் தோல்விகளை நீண்ட பட்டியலிட்டே சொல்லலாம். தோல்விகளை அளிக்கும் முதலாளித் துவம், முதலாளித்துவ பாதை நமக்கு தேவையா என்ற கேள்வி எழுகின்றது. சமூகத்தில் கல்வி கற்காத சமூகம், மூடத்தனம் மிகுந்த சமூகம், விஞ்ஞான வளர்ச்சி பாதையில் ஈடு கொடுத்து முன்னேற முடியாது. உழைப்பு, விஞ்ஞானம், உழைப்பின் மூலம் கிடைக்கும் மூலதனம் இவற்றைப்பற்றி அடிப்படை தெளிவில்லாத இந்த சமூகத்தால் வளர்ச்சி என்ற பாதையை நோக்கி வர இயலாது.

எனவே, முதலாளித்துவ சித்தாந்தத்தால் நாம் இழந்தது ஏராளம், இழக்கப் போவதும் ஏராளம். எனவே நாம் மாற வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். மாற்றம் என்பது சித்தாந்தத்தின் மாற்றமாக அனைவரும் சமம் என்று சொல்லக் கூடிய மனித நேயத்தை சொல்லக்கூடிய, உழைப் பின் வலிமையை சொல்லக்கூடிய, சித்தாந்தமாக இருக்க வேண்டும். அந்த பாதை தான் மார்க்ஸ் காட்டிய மார்க்சீய பாதையாகும். சோசலிச பாதையே மாற்று மற்றதெல்லாம் ஏமாற்று என்பதை உணர்வோம்! அனைவருக்கும் பகிர்வோம்! மாற்றத்தை ஏற்படுத்துவோம்!

# மின்வாரியத்தை தனியார் மயமாக்க முயற்சிக்கும் தமிழக அரசு!



தமிழ்நாடு மின்சார வாரியம் உருவாகி பொதுத்துறை நிறுவனமாக 64 ஆண்டுகளுக்கு மேல் சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. மத்திய மாநில அரசுகளின் தவறான கொள்கையினாலும் பொதுத்துறைகளை தனியாரிடம் விற்கும் நடவடிக்கைகளை எடுத்து வருவதனால் இந்த தேசத்தில் உள்ள அனைத்து பொதுத்துறை நிறுவனங்களும் மெல்ல மெல்ல தனது முகத்தோற்றத்தை இழந்து வருகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியம் 2,95,98,000 கோடிக்கு மேல் மின் இணைப்புகளைக் கொண்டு பராமரிக்கும் நிறுவனமாக இருந்து வருகிறது. 1,42,000 பணியாளர்கள் இருக்க வேண்டிய மின்வாரியத்தில் 82,000-க்கும் குறைவான ஊழியர்களே கடும் வேலைப்பளுவுடன் மக்கள் சேவையை சிறப்பாக செய்து பணியாற்றி வருகின்றனர்.

மின்சார சட்டதிருத்த மசோதா 2020 நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிட துடிக்கும் மத்திய அரசு அதே வேளையில் தொழிற் சங்கங்களும் பல மாநில அரசுகளும் இந்த சட்டத்திருத்த மசோதாவை எதிர்த்து கடுமையாக போராடி வருகிறார்கள்.

மின்சார சட்டதிருத்த மசோதாவை கொள்கை அளவில் எதிர்ப்பதாக கூறிவரும் தமிழக அரசு கொள்ளைப்புற வழியாக இந்த சட்டத்தில் உள்ள அம்சங்களை மறைமுகமாக அமல்படுத்தி வருகிறது.

**துணை மின் நிலையம் தனியார் மயம்**

மின்வாரியத்திற்கு சொந்தமான ஐந்து துணை மின்நிலையங்களை தனியாருக்கு இரண்டாண்டுகளுக்கு பராமரிப்பதற்கு தமிழக அரசும் மின்வாரியமும் கொடுத்துள்ளது. மின்துறை அமைச்சரை தொழிற்சங்கங்கள் சந்தித்து பேசிய பொழுது துணை மின் நிலையங்களை தனியாருக்கு கொடுக்க மாட்டோம் என்று கூறினார். தொழிற்சங்கங்களிடம் உறுதியைக் கொடுத்த அமைச்சர் மறுபுறம் துணை மின் நிலையத்தை திறந்து வைக்க தனது கட்சி சட்டமன்ற உறுப்பினரை அனுப்பி வைக்கிறார்.

பத்திரிக்கையாளர் சந்திப்பில் கேங்மென் பதவி நிரப்பிடும் பொழுது இந்த அவுட்சோர்சிங் உத்தரவுகள் ரத்து செய்யப்படும் என உண்மைக்கு புறம்பான தகவலை மக்கள் மன்றத்தில் சொல்லுகிறார். இந்த துணை மின் நிலையத்தில் உள்ள பதவிகள் பெரும்பாலும் பொறியாளர்கள் தொடர்பு உடையவை நூறு கோடிக்கு மேல் பெறுமானமுள்ள துணை மின் நிலையத்தை வெறும் ரூ. 4.10 லட்சத்தை டெபாசிட்டாக பெற்றுக்கொண்டு பராமரிக்க விடுவது கடுமையான ஆபத்தை விளைவிக்கும். தளவாட பொருட்களுக்கு எந்தவித உத்தரவாதமும் தனியார் நிறுவனங்களால் கொடுக்க முடியாது.

**சிறு புனல் உற்பத்தி நிலையங்கள் தனியாருக்கு**

3 மெகாவாட்டுக்கு கீழ் உள்ள சிறு புனல் மின் உற்பத்தி நிலையங்களை பராமரிக்கவும் தனியாருக்கு விடுவதற்கு ஒப்பந்த புள்ளிகளை கோர மின்வாரியம் முடிவு செய்துள்ளது.

அடுத்த கட்டமாக மின் வாரியத்திற்கு சொந்தமான உற்பத்தி நிலையங்களின் உற்பத்தியை நிறுத்தி வைத்து தனியாரிடத்தில் அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்கி வருகிறது. இனி

அநேகமாக மின்வாரிய உற்பத்தி நிலையங்கள் அனைத்தும் படிப்படியாக தனியாரிடம் பராமரிக்க கொடுக்கும் நிலைக்கு தள்ளப்படும் நிலைக்கு செல்ல திட்டமிட்டு வருகிறார்கள்.

**பிரிவு அலுவலகங்களின் பணிகளும் தனியாருக்கு**

தற்போது வாரியம் வட்ட அளவில் உபகோட்டத்தில் 50 சதவீதத்திற்கு மேல் காலியிடங்கள் இருந்தால், ரூ.412/- தினக்கூலி கொடுத்து 20 பேரை நியமிக்க தனியாரிடம் ஒப்பந்த புள்ளி கோரியது.

மின்வாரிய பணி என்பது மிகவும் ஆபத்தான அதே நேரத்தில் அர்பணிப்பு மிக்க பணியாகும். ஆனால் இதில் தனியார் முதலாளி களுடன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆட்களை நியமிப்பது விபத்து ஏற்படுவதுடன், மின்வாரிய விநியோகப்பிரிவிலும் தனியாரிடம் கொடுக்கும் நடவடிக்கையாக மாறும்.

தொழிற்சங்கங்களுடன் கடந்த 22.02.2018-ல் ஏற்படுத்தப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரூ.380/- தினக் கூலியாக வழங்க வேண்டும் என்ற சரத்து உள்ள பொழுது, அதை பல ஆண்டுகளாக இயற்கை பேரிடர் காலத்தில் பணிபுரிந்த ஒப்பந்த ஊழியர்களுக்கு வழங்காமல் யாரோ ஒரு தனியார் கார்ப்ரேட் கம்பெனிக்கு விடுகின்ற நடவடிக்கை தனியார் மயத்தின் மோகத்தில் தான் நடை பெறுகிறது என்று உறுதியாக சொல்ல முடியும்.

**முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் தமிழக அரசு**

மாண்புமிகு முதல்வர் மற்றும் மின்துறை அமைச்சர் ஆகியோர் மின்வாரியம் தனியார் மயமாகாது எனச்சொல்லி வருகிறார்கள். நல்ல விஷயம் வரவேற்க வேண்டியது. ஆனால் அதன் கட்டமைப்பை, மின் உற்பத்தியை, துணை மின் நிலையங்களை தனியாரிடம் கொடுப்பதும் தற்போது விநியோகப்பிரிவில் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு கொடுப்பதும் தனியார் மயம் இல்லையா?

அரசு ஆணை 950 நாள் 08.08.90-ன்படி மின்வாரியத்தில் ஒப்பந்த முறை தடைசெய்யப் பட்ட பகுதிகளில் இவ்வாறு தனியாரை ஈடுபடுத்து வது அரசு உத்திரவை அரசே மீறும் ஏற்பாடு அல்லவா?

அத்தியாவசிய துறையான மின்துறையில் காலிப்பணி இடங்களை நிரப்பாமல் இருப்பது தனியாருக்கு மின்வாரியத்தை தாரை வார்ப்பதை தவிர வேறு என்ன நோக்கம் இருக்க முடியும் இந்த தமிழக அரசுக்கு! உற்பத்தி, விநியோகம் ஆகியவற்றில் தனியாரிடம் இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகளில் கொடுத்த பின் மின்வாரியம் தனியாரிடம் போகாது என முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்கிறார்கள்.

**கேங்மேன் பதவியும் வழக்கும்**

கேங்மேன் பதவி உருவாக்கிய பொழுது, தொழிற்தகராறு சட்டத்தின்படி தொழிற் சங்கங்களோடு கலந்து பேசி உருவாக்கி இருக்க வேண்டும். 5,000 கேங்மேன் பதவிகள் நிரப்பும் பொழுது 5,000 பதவிகள் (களஉதவியாளர்) ஒழிக்கப்படும் என உத்திரவு வெளியிட்ட காரணத் தாலும் பல ஆண்டுகளாக பணியாற்றி வரும் ஒப்பந்த ஊழியர்களின் வாழ்வாதாரத்தை கணக்கில் கொண்டும் தான் தொழிற் சங்கங்கள் நீதிமன்றத் திற்கு சென்றன.

தற்போது மின்வாரிய நிர்வாகம் எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினால், தொழிற்சங்கத்தின் ஆலோசனையையும் பெற்று ஒருமித்த கருத்தை ஏற்றுக்கொள்கின்ற வகையில் உருவாக்க வேண்டியது நிர்வாகத்தின் கடமை. ஆனால் நிர்வாகம் இது தொடர்பாக பேச மறுக்கிறது.

உயர்நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கின்ற பொழுது, அனைத்து நடவடிக்கையும் எடுத்த நிர்வாகம் தற்போது நியமன உத்திரவு வழங்கும் பொழுது மட்டும் தொழிற்சங்கத்தை காரணம் காட்டுவது தவறானது. அரசு மற்றும் வாரியத்தின் நோக்கமே! கேங்மேன் பதவியை நிரப்புவதற்கு பதில் ஒப்பந்த முறையில் தனியாரிடம் போக வேண்டும் என்ற நோக்கம் தான்.

எவ்வளவு பொய்களை அடித்துச் சொன்னா லும் மின்வாரிய ஊழியர்களும், பொறியாளர்களும், ஏன் பொதுமக்களும் நம்ப மாட்டார்கள் என்பது தான் உண்மை.

**உதய் திட்டம்**

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் தமிழக மின்வாரியத்தை உதய் திட்டத்தில் இணைக்க மாட்டேன் என உறுதியாக சொன்னார் கள். ஆனால் அம்மா அரசு எனக் கூறிவரும் தற்போதைய ஆட்சியாளர்கள் உதய் திட்டத்தில் இணைந்தது மட்டுமல்ல மின்வாரியத்தை தனியார் மயமாக்க மத்திய பிஜேபி அரசுக்கு ஒத்துழைப்பு தர தவமிருந்து வருகிறார்கள்.

தற்போது 21.12.2020 அன்று நடைபெற்ற காத்திருப்பு போராட்டத்தின் விளைவாக அவுட்சோர்சிங் உத்தரவுகள் ரத்து செய்யப் பட்டுள்ளது. மின் ஊழியர்கள் அலுவலர்கள் பொறியாளர் குடும்பங்கள் பொது மக்களுடன், விவசாயிகளுடன் இணைந்து போராடி மின் துறையை பாதுகாப்போம்.

- எஸ்.இராஜேந்திரன்



# டெல்லி விவசாயிகளின் போராட்டம் - மோடி ஆட்சிக்கு முடிவு கட்டும் துவக்கப்புள்ளி..!

ஆயிரம் ஆயிரமாய் அணிவகுத்து இந்திய தலைநகர் டெல்லியில் இலட்சக்கணக்கான விவசாயிகள் முற்றுகையிட்டு நிற்கின்றனர். பல்லாயிரக்கணக்கான ட்ராக்டர் வாகனங்களில் அணி அணியாய் விவசாயிகள் டெல்லியை நோக்கி போர்ப்பரணி பாடி வருகின்றனர்.

நாடாளுமன்றத்தில் எந்த விவாதமும் இன்றி மோடி அரசு கொண்டு வந்திருக்கின்ற வேளாண்மை திருத்த சட்டங்கள் விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு வேட்டு வைத்து விடும் என்று மிகப்பெரும் அச்ச உணர்வு விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. உலகமயத்தின் கோரப்பிடியில் சிக்கி சீரழிந்து கொண்டிருக்கும் இந்திய விவசாயிகளின் தலையில் பேரிடியாக இந்த சட்டம் அமைந்துள்ளது.

உலகமயம் தனியார்மயம் தாராளமயக் கொள்கைகளால் விவசாயம் மிகப்பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இடுபொருள்கள் விலை உயர்வு, விவசாயத்துறைக்கு அளித்துவந்த அரசு மானியங்கள் அளவை குறைப்பது, இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதால் விளைபொருள் வீழ்ச்சி, வங்கிக்கடன் மறுப்பு, விவசாயத் துறைக்கு வழங்கப்படும் ஒதுக்கீட்டு நிதியை குறைப்பது. இவற்றின் விளைவாக விவசாயிகளின் வாழ்வு கேள்விக்குறியாகி விட்டது.

கடன் நெருக்கடி, வேலையின்மை, பட்டினிச் சாவுகள் இதுவே இன்றைய கிராமங்களின் அவல வாழ்வு. கடன் நெருக்கடி தாங்காமல் விவசாயிகள் தற்கொலைக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆறு ஆண்டுகளில் 60 ஆயிரம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 2019-ல் மட்டும் 10 ஆயிரத்து 281 விவசாயிகளின் தற்கொலை மரணம் நிகழ்ந்துள்ளன. 30 நிமிடத்துக்கு ஒரு விவசாயி தற்கொலை செய்து கொள்வதாக அரசு புள்ளிவிவரங்கள் தெரிவிக்கிறது.

மூன்று வேளாண்மை அவசரச் சட்டங்களை 2020, ஜூன் மாதம் மோடி அரசு பிறப்பித்தது. 1955 ஆண்டு உருவாக்கப்பட்ட அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தில் திருத்தங்களை செய்து ஒரு அவசர சட்டத்தை பிறப்பித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் கூட விவாதிக்காமல் ஜனநாயகத்தின் கழுத்தை நெரித்து கொண்டுவரப்பட்ட இந்த அவசரச் சட்டம் யாருடைய நலனுக்காக? இந்த சட்டத்தால் ஆதாயம் அடையப் போவது யார்? இந்திய விவசாயத்தில் வேளாண் சட்டங்கள் 2020 அமுல்படுத்துவதால் நிகழப்போகும் மாற்றங்கள் என்ன? விவசாயிகளுக்கு விலை உத்தரவாதம் மற்றும் விவசாய சேவைகள் (அதிகாரம் அளித்தல் மற்றும் பாதுகாப்பு சட்டம்) 2020.

இச்சட்டம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்காக கொண்டுவரப்படுகிறது என்று கூறப்படுகிறது. விவசாய உற்பத்திப் பொருட்களை கார்ப்பரேட் நிறுவனங்களுடன் விவசாயிகள் ஒப்பந்தம்

செய்துகொண்டு நல்ல விலையை பெறுவார்கள் என்று இச்சட்டம் கூறுகிறது.

இந்தச் சட்டங்கள் தனியார் முதலீடுகளை கொண்டுவரும் என்கிறது மோடி அரசு. பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களின் கரங்களில் விவசாயத்தை மொத்தமாக ஒப்படைப்பதற்கான ஒரு ஏற்பாடுதான் இச்சட்டம். சட்டம் நாடாளுமன்ற அவையில் நிறைவேறுவதற்கு முன்பாகவே மோடியின் பேரன்பை பெற்ற கார்ப்பரேட் முதலாளி அதானி குழுமம் உணவு கொள்முதல் நிலையங்களை பிரம்மாண்டமான முறையில் கட்டி அமைத்ததன் மர்மம் என்ன?

அன்னிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்காக இந்திய விவசாயத்தை காவு கொடுக்க கார்ப்பரேட் நலன் காக்கும் மோடி அரசு முடிவு செய்துவிட்டது. கவர்ச்சிகரமான வாக்குறுதிகளின் பின்னே அம்பானி, அதானி கார்ப்பரேட் குழும முதலாளித்துவ கொள்ளைக் கும்பலின் நலன் ஒளிந்திருக்கிறது.

வயலில் பயிர்கள் வளரும் நிலையிலேயே கார்ப்பரேட் நிறுவனங்கள் விலையை தீர்மானித்து விவசாயிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும். நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு தானியங்களை அறுவடை செய்து கொள்ளும். ஆனால் அதைவிட பலமடங்கு கொள்ளை லாபத்தில் கார்ப்பரேட் நிறுவனங்கள் விற்றுக் கொள்ளும்.

நிலம் மட்டுமே விவசாயிகளிடம் இருக்கும். நிலத்தில் எதைப் பயிரிட வேண்டும்; எந்த உரங்களை, எந்த பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்த வேண்டும் என்பதை கார்ப்பரேட்டுகளே தீர்மானிக்கும். விவசாய கருவிகள், இயந்திரங்கள், தொழில் நுட்பங்கள் அனைத்தையும் கார்ப்பரேட் நிறுவனங்களே முடிவெடுக்கும். தீர்மானிக்கப்பட்ட விலைப்படி, உற்பத்தியும் கணக்கிட்டு, செலவுகளை கழித்துக்கொண்டு மீதி உள்ளதை மட்டுமே விவசாயிகளுக்கு வழங்கும்.

உற்பத்திப் பொருட்களை கார்ப்பரேட் நிறுவனங்கள் பெறுகின்ற பொழுது, அதற்கான காலம், விலை, விளைபொருட்களின் தரம் இவற்றை பற்றி மூன்றாவது நபர் சான்றிதழ் வழங்குவார்கள். தரம் இல்லை என்று உற்பத்திப் பொருள்கள் கொள்முதல் செய்வதற்கு கார்ப்பரேட் நிறுவனங்கள் மறுப்பதற்கான வாய்ப்பு இதில் உள்ளது.

இயற்கையின் சீற்றங்கள் வறட்சி, வெள்ளம் காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டால் கார்ப்பரேட் நிறுவனங்கள் பொறுப்பேற்காது. அரசாங்கம் வெள்ள நிவாரணம், வறட்சி நிவாரணம் வழங்காது. தரக் கட்டுப்பாடு என்ற பெயரில் உற்பத்திப் பொருட்களை ஆய்வுக்கு உட்படுத்துவது நடக்கும்; தரசான்றிதழ் வழங்கினால் மட்டுமே நிறுவனங்கள் கொள்முதல் செய்யும்.

உற்பத்திப் பொருட்களை குறைவாக மதிப்பிட்டு விவசாயிகளின் வயிற்றில் அடிப்பார்கள். விவசாயிகள் நஷ்டம் அடைந்து கார்ப்பரேட் நிறுவனங்களுடன் வாங்கிய முன் தொகைக்கு ஈடு செய்ய இயலாமல் தங்களது வாழ்வாதாரமான நிலங்களை இழந்து நிற்கும் கொடுமைக்கு தள்ளப்படுவார்கள்.

விவசாய விளைபொருள் வியாபாரம் மற்றும் வர்த்தக (மேம்பாடு மற்றும் எளிமைப் படுத்துதல்) சட்டம்2020

உற்பத்திப் பொருளை வாங்குவதிலும் விற்பதிலும் விவசாயிகளுக்கும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் தேர்வு செய்துகொள்ளும் உரிமையை இந்த சட்டம் வழங்குவதாக மோடி அரசு கூறுகிறது. இலாபகரமான விலை விவசாயிகளுக்கு கிடைக்கும். உற்பத்திப் பொருள் விற்பனை தடை இல்லாமல் நடைபெறும். இத்திட்டம் நடைமுறைப்படுத்தும்போது ஒரு சில வினாடிகளில் உலகத்தின் எங்கோ ஒரு மூலையில் உள்ளவருக்கு இங்குள்ள விளைபொருள் உரிமையாகும்.

மின்னணு வர்த்தகத்தின் மூலமாக கார்ப்பரேட் நிறுவனங்கள் உள்ளூரில் சேமிப்புக் கிடங்கை வைத்துவிட்டு ஆன்லைன் மூலமாக பிற நாடுகளுக்கு விற்று விடுவார்கள். தொடர்ந்து பொருள்கள் ஏற்றுமதி ஆகிவிடும்.

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், மண்ணின் மைந்தர்களுக்கு கையளவு உணவு பொருள் கூட கிடைக்காமல் போகும். கார்ப்பரேட் நிறுவனங்கள் உணவுப் பொருட்களை பல மடங்கு விலை ஏற்றி கொள்ளை அடிப்பார்கள். இதன் விளைவாக உணவு பஞ்சமும், பட்டினிச் சாவுகளும் நிகழ இருக்கின்றன. கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு தங்கு தடையற்ற வர்த்தக சுதந்திரத்தை இந்தச் சட்டம் வழங்குகிறது.

ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே இந்தியா, ஒரே விவசாயம், ஒரே சந்தை; இந்த லட்சியத்தை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் முன்னேறுகிறது மோடி அரசு.நாட்டின் செல்வவளங்கள்

அனைத்தையும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு தாரை வார்த்துக் கொடுத்தது போதாதென்று மிச்சமிருக்கும் விவசாயத்தையும் அவர்களது கரங்களில் ஒப்படைக்கும் ஏற்பாடுதான் இந்த புதிய வேளாண் சட்டங்கள்.

எதிர்காலத்தில்

60 சதவீதத்துக்கும் மேலான மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். இந்திய அரசின் கணக்குப்படி சிறு மற்றும் குறு விவசாயிகளின் எண்ணிக்கை 86 விழுக்காடு, பணக்கார விவசாயிகளின் எண்ணிக்கை 14 விழுக்காடு, இந்திய வேளாண்மை துறையின் கணக்கெடுப்பின்படி குறு விவசாயிகள் ஒன்னேகால் ஏக்கர் முதல் 2 -1/2 ஏக்கர் வரை நிலம் வைத்துள்ளனர். சிறிய விவசாயிகள் இரண்டரை ஏக்கரில் இருந்து 5 ஏக்கர் நிலத்தைசொந்தமாக வைத்துள்ளனர். நடுத்தர விவசாயிகள் பத்து ஏக்கரில் இருந்து 25 ஏக்கர் வரை வைத்து உள்ளனர். விவசாயிகளின் மொத்த எண்ணிக்கையில் 86 விழுக்காடு இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

மோடி அரசு கொண்டு வந்துள்ள இந்த மூன்று வேளாண்மை திருத்தச் சட்டங்களும் அனைத்து விவசாயிகளையும், கூலி ஏழை உழவர்களையும், ஒட்டுமொத்த மக்களையும் பாதிக்கக் கூடியது. இந்தச் சட்டத்தின் மூலம் விவசாயிகள் வருமான வரி வளையத்திற்குள் கொண்டு வரப்படுவார்கள். விவசாயிகளுடைய ஒவ்வொரு வருமானமும் கணக்கிடப்பட்டு வருமான வரி பிடித்தம் செய்யப்படும்.

வேளாண் திருத்த சட்டங்கள் அரசியல் சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மாநில உரிமைக்கு வேட்டு வைக்கக் கூடியவை. கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரானவை.

கார்ப்பரேட் காவி பாசிசத்தை அமல்படுத்தும் மோடி கும்பலுக்கு கணக்கின்றி நிதி ஆதாரத்தையும் நன்கொடைகளையும் வாரி வழங்குகின்றன கார்ப்பரேட் அம்பானி, அதானி கும்பல். அதற்கு நன்றிக் கடனாக விவசாயத்தை முற்றிலுமாக கார்ப்பரேட்டுகளுக்கு தாரைவார்ப்பது என்பதே மோடி அரசு கொண்டுவந்திருக்கும் இச்சட்டங்களின் நோக்கம்.

ஆட்சியாளர்கள் தங்களது அகண்ட பாரத கனவை நிறைவேற்ற, மாநில உரிமைகளைப் பறித்து, ஒரே நாடு என்கின்ற ஒற்றை இந்தியாவை உருவாக்குவதை இலட்சியமாகக் கொண்டு இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

ரோம் நகர் பற்றி எரிகின்ற பொழுது நீரோ மன்னன் பிடில் வாசித்ததாக சொல்வார்கள். நாட்டின் தலைமை அமைச்சர் மோடி அலங்காரங்களோடு புதிய நாடாளுமன்ற கட்டிடத்திற்கு பூமி பூஜை செய்கிறார். உறைய வைக்கும் கடும் குளிரிலும் போராடிக்கொண்டிருக்கிறார்கள் விவசாயிகள்.


டெல்லி தலைநகரை அதிர வைத்துக் கொண்டிருக்கும் போராட்டம், பஞ்சாப், அரியானா மாநிலத்தைச் சேர்ந்த விவசாயிகளின் உரிமையை வென்றெடுக்கும் போராட்டம் மட்டுமல்ல, இந்திய துணை கண்டத்தின் அனைத்து விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தை காப்பதற்கான போராட்டம். தற்போது மகாராஷ்டிரம் பீகார் மாநில விவசாயிகளும் டெல்லியை நோக்கி சென்று கொண்டுள்ளனர். அனைத்து மாநில விவசாயிகளும் ஓரணியில் போராட்டக் களத்தில் நின்றால், ஆட்சியாளர்களின் ஆணவத்தை அடக்கி வெற்றியை நோக்கி இந்தப் போராட்டம் செல்லும். வரலாற்றின் திசையை மாற்றும் வல்லமை கொண்டவர்கள் இந்திய விவசாயிகள்.

டெல்லி தலைநகர் இதுவரை கண்டும் கேட்டிராத போராட்டக் களத்தை சந்தித்து வருகிறது. நாடாளுமன்ற பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று இறுமாப்போடு இருக்கும் ஆட்சியாளர்களுக்கு சிம்ம சொப்பனமாய் திகழ்கிறது விவசாயிகளின் போராட்டம். மாபெரும் மக்கள் சக்திக்கு முன்னால் பாசிஸ்டுகள் படு தோல்வி அடைவது திண்ணம்.

எதிர்காலத்தில் சமூக மாற்றத்திற்கான முன்னெடுப்புகளுக்கும், மக்களை விழிப்புறச் செய்வதற்கும் விவசாயிகளின் போராட்டம் துவக்க உரையாக அமைந்துள்ளது. இந்தத் துவக்க உரையைத் தொடர்ந்து முடிவுரையை இந்திய பாட்டாளி வர்க்கம் விரைவில் எழுதி முடிக்கும். இதற்கான காலம் வெகு தொலைவில் இல்லை.

- தி. ஜெயசங்கர்

ஜாதி மத பேதங்கள் குறுக்கே வரமுடியாது!
யாரும் இந்த திருமணங்களை தடுக்கவும் முடியாது!!
விரும்பிய வரை மணப்பது ஒருவரின் அடிப்படை உரிமை!!!
கர்நாடக உயர்நீதி மன்ற தீர்ப்பு



# கல்வி உதவி தொகையை தரமறுக்கும் மத்திய அரசை எதிர்த்து நாம் ஓரணியில் திரள்வோம்...



ஏழை- எளிய பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் இன மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தை ரத்து செய்ய மத்திய மோடி அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்குப் பதிலாக பொதுவான கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தப்போவதாக தெரிவித்துள்ளது.

பள்ளிக் கல்வியை முடித்த ஏழை, எளிய பிற்படுத்தப்பட்ட, பழங்குடி மற்றும் தலித் மாணவர்கள் பட்டப் படிப்புகளில் சேர்ந்து உயர்கல்வி படிப்பதற்காகவே உருவாக்கப்பட்டதுதான் போஸ்ட் மெட்ரிக் ஸ்காலர்ஷிப் திட்டம். இதன் மூலம் ஆண்டுக்கு சுமார் 60 லட்சம் மாணவர்கள் பயனடைந்து வந்தனர்.

ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையை வழங்கும் திட்டத்தை மோடி அரசு தடாலடியாக முடக்கவில்லை. படிப்படியாகவே இத்திட்டத்தை முடக்கி வந்துள்ளது. கொடுக்க வேண்டிய நிதியை முறையாகக் கொடுக்காமல் இழுத்தடித்து இத்திட்டத்தை ஏற்கெனவே வழக்கற்றதாக மாற்றியிருக்கிறது மோடி அரசு. 2018-ம் ஆண்டுக்கு முன்பு வரை 60:40 என்ற வகையில் மத்திய அரசு 60ரூ உதவித் தொகையை வழங்கிவந்ததை கடந்த 2018-ம் ஆண்டு முதல் 90 : 10 என மாற்றியமைத்திருக்கிறது மோடி அரசு. இதனை மீண்டும் 60 : 40 என்பதாக மாற்றியமைக்க சமீபத்தில் தனது எஜமானர் மோடிக்குக் கடிதம் எழுதியிருந்தார் எடப்பாடி.

2015 -16 ஆண்டில் மட்டும், 37 ஆயிரத்து 84 தமிழக SC / ST மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை வழங்கப்படவில்லை என்று அகில இந்திய தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் இன தேசிய ஆணையம் குற்றம் சுமத்துகிறது. மாநில அரசோ மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்று காரணம் காட்டுகிறது. ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி உதவித்தொகை பெறுவதில் உள்ள சிக்கல்கள் குறித்து தேசிய ஆணையம் மாநில அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளது.

2014 -15 ஆண்டில் மாநில அரசுக்கு தர வேண்டிய நிதி 1,175 கோடி ரூபாய் மத்திய அரசு தராமல் நிலுவையில் வைத்துள்ளது. 2017- 18 ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்து ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 3347 கோடி ரூபாய் மட்டுமே. மொத்த மாநிலங்களுக்கும் கொடுக்க வேண்டிய நிதியை இவ்வளவு குறைவாக ஒதுக்கீடு செய்தது என்பது, படிப்படியாக இத்திட்டத்தை ஒட்டுமொத்தமாக ஒழித்து கட்டிவிடலாம் என்ற உள்நோக்கத்தோடு செய்யப்பட்ட சதியாகும்.

கடந்த 2000 ஆண்டு காலமாக கல்வி உரிமை மறுக்கப்பட்டு வந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில்தான் கல்வி நிலையங்களின் கதவுகள் சிறிது திறக்கப்பட்டது. அண்ணல் அம்பேத்கார் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக நடத்திய போராட்டத்தின் விளைவாக காலனி ஆட்சி காலத்தில் இந்த கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டது.

சாதி ஆதிக்க அடக்கு முறைகள், இவற்றினூடே பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் தலித் மாணவன் கல்வி கற்க வேண்டிய சூழ்நிலை நிலவுகிறது. உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்தவுடன், பட்டப்படிப்புக்காக கல்லூரிகளில் சேர்வதற்கு பொருளாதார வாய்ப்பு வசதிகள் இடம் தராததால் பெரும்பான்மையான தலித் மாணவர்கள் படிப்பை பாதியிலேயே

நிறுத்திவிடுகிறார்கள்.

கிராமப்புற தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் இன மாணவ, மாணவிகள் பத்தாம் வகுப்போடு தங்களது கல்வி பயணத்தை நிறுத்தி விடுகிறார்கள். கல்வி கற்பதற்கு, நிலவுகின்ற ஏழ்மை நிலை, அன்றாட வாழ்க்கை போராட்டம் இவற்றின் விளைவாக படிப்பை நிறுத்தி விடுபவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.(Drop out rate in tamilnadu) 2005-2006 கல்வியாண்டில் 43 விழுக்காடு மாணவர்களும், 40 விழுக்காடு மாணவிகளும் பத்தாம் வகுப்போடு படிப்பை நிறுத்தி விட்டனர். மேல்நிலை கல்வியில் 72 சதவிகிதம் மாணவர்களும், 66 சதவிகிதம் மாணவிகளும் கல்லூரிப் படிப்புக்கு செல்ல இயலவில்லை.

போஸ்ட் மெரிட் ஸ்காலர்சிப் திட்டத்தை ரத்து செய்யும் மைய அரசின் இந்த சதித் திட்டத்தால் தலித் மாணவர்களுடைய எதிர்காலம் இருள் சூழ்ந்து விடும். ஏனெனில் பொருளாதாரரீதியில் அடித்தட்டில் இருப்பவர்களும் பெருவாரியாக தலித் சமூக மக்களே. உயர்கல்வி என்பது இனி அவர்களுக்கு எட்டாக் கனியே, சமூக மாற்றத்திற்கான எத்தகைய முன்னெடுப் புகளையும், சமூக சீர்திருத்தங்களையும் அதன் அறிகுறி தென்பட்டாலும் அதை தகர்ப்பது தான் சனாதனக் கும்பல் செய்யவிரும்பும் 'திருப்பணி'. அதோடு கல்வியை முழுக்க முழுக்க லாபத்திற்கான சரக்காக மாற்றும் கார்ப்பரேட் சதித்தனத்தின் அங்கமாகவும் இதனை நடைமுறைப் படுத்தியிருக்கிறது மோடி அரசு. நீண்ட நெடிய போராட்டங்களின் விளைபொருளாய் சமூகநீதிக்கு கிடைத்த சீர்திருத்த சலுகைகளை, படிப்படியாக ஒழித்துக்கட்டும் நடவடிக்கைகளை இந்த கொரோனா சூழலைப் பயன்படுத்திக் கொண்டு தொடர்ந்து முயற்சித்து வருகிறது மோடி அரசு.

இது வெறுமனே தலித் மக்களுடைய பிரச்சினை மட்டுமல்ல, ஆகப் பெரும்பான்மையான மக்களுடைய கல்வி வாய்ப்புகளை ஒழித்துக்கட்டும் நடவடிக்கையாகும். நாடெங்கிலும் உள்ள ஜனநாயக சக்திகள் அனைவரும் இந்த அட்டூழியங்களுக்கு எதிராக களம் காண வேண்டிய தேவை முன்னெப்போதைக் காட்டிலும் இப்போது மிக அதிகமாக உள்ளது. எவ்வாறாயினும் கல்வி தர வேண்டியது அரசின் கடமை. அதை சம தராசில் வைத்து பார்க்காமல் பல நூறு ஆண்டுகளாக பின்தங்கியுள்ள மக்களுக்கு உதவித்தொகை அளித்து முன்னேற்ற பாதைக்கு கொண்டு வரும் பொறுப்பு அரசுக்கு உள்ளது. அந்த பொறுப்பை தட்டிக்கழிப்பதன் மூலம் இந்த அரசு யாருடைய நலனுக்காக நிற்கின்றது என்பதை காண முடிகின்றது.

ஏழைகள் ஏழைகளாக நீடிப்பது, பணக்காரர்கள் பெரும் பணக்காரர்களாக மாறுவதும் தான் இந்த அரசின் கொள்கை என்றால் இந்த அரசை புறந்தள்ளி விட்டு சமான்ய மக்களுக்கான அரசை கொண்டு வருவது தான் நமது தலையாய கடமை. அதற்கான பாதையில் முன்னேறுவோம்.

முதலாளித்துவத்திற்கு எதிராக மக்கள் நலன் சார்ந்த கொள்கை ஒன்று தான். அது மார்க்சிய கொள்கை, சோசலிச பாதை சோசலிசமே மாற்று மாற்றதெல்லாம் ஏமாற்று.

- தி. ஜெயசங்கர்

## முயற்சியே முன்னேற்றத்தின் படிக்கட்டு

ஒரு இடத்தில் யானைகள் நிறைய கட்டப்பட்டிருந்தன. அந்த வழியே போன ஒருவன் யானைகளை பார்த்தப்படியே சென்றான். ஒரே ஒரு கயிறு மட்டும் தான் யானைகளின் காலில் கட்டி இருக்கிறது. இவ்வளவு பெரிய உருவம் கொண்ட யானை அதை அறுத்து கொண்டு போகாதா என்று வியந்தான். அருகில்இருந்த பாகனிடம் இந்த யானைகள் கயிற்றை அறுத்து கொண்டு போகாதா என்று கேட்டான்.

இந்த யானைகள் சிறியதாக இருக்கும் போது இந்த கயிற்றால் தான் கட்டினோம். அப்போது அது இழுக்கும் போது இந்த கயிறுகள் அறுகவில்லை. யானைகள் பெரிதாக பெரிதாக தன்னால் கயிற்றை அறுக்க முடியாது என்று எண்ணி கயிற்றை அறுக்க முயற்சி செய்வதில்லை என்று பாகன் சொன்னான்.

அந்த மனிதன் ஆச்சரியப்பட்டான் இந்த யானைகள் ஒரு நிமிடத்தில் இந்தக் கயிற்றை அறுத்து கொண்டு போகலாம் ஆனால் அவைகள் அதற்கான முயற்சி செய்வதில்லை அதனாலேயே அவைகள் கட்டுண்டு கிடக்கின்றன.

இந்த யானைகள் போல் நம்மில் எத்தனை பேர் ஒரு முறை தோற்றதும் மீண்டும் முயற்சி செய்யாமல் துவண்டு போகின்றோம். தோல்வி என்பது நாம் வெற்றியடைய போவதின் முதற்படியே தொடர் முயற்சியே நம் வெற்றிக்கு வழி வகுக்கும்.



# மத்திய அரசு பெருமுதலாளிகளுக்கு என்றால்? நாம் யாருக்கு வாக்களிக்க வேண்டும்

உலகெங்கும் பொருளாதாரம் மந்த நிலையில் உள்ளதை பொருளியல் வல்லுநர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். நாமும் கண்கூடாகக் காண்கிறோம். இந்தியாவில் பொருளியல் தேக்கம் படுமோசமாக உள்ள நிலையில் இந்தியத் திருநாட்டின் நிதியமைச்சருக்கு மட்டும் இந்தியப் பொருளியல் சீராகவும் சிறப்பாகவும் தெரிவதன் மாயம் என்ன என்று தெரியவில்லை.

காஃபிடே நிறுவனம் வி.ஜி.சித்தார்த்தாவின் மறைவைத் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு பெருங்குழுமங்கள் (கார்ப்பரேட்டுகள்) பெருமளவிற்குக் கூக்குரலிட்டனர். தங்கள் இலாபத்தைப் பாதுகாக்க கார்ப்பரேட் வரி என்னும் கொடுந்துன்பத்தால் தாங்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், கார்ப்பரேட் வரி பெறுவதே தீவிரவாதம் எனவும் பெருமுதலாளிகள் முதலைக் கண்ணீர் வடித்து, நினைத்ததைச் சாதித்தும் கொண்டனர்.

மூன்று இலட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட போது இவர்கள் குரலெழுப்பவே இல்லை. அரசும் அவையெல்லம் குடும்பப் பிரச்சனைகளால் நேர்ந்தவை எனப்பெறுப்பேற்காமல் அரசு அறிக்கைகளில் அவற்றைத் தடந்தெரியாமல் அழித்தது.

உழைக்கும் மக்களின் கூலியையே பெருமளவு, சுரண்டும் மறைமுக வரி விதிப்பு வரி தீவிரவாதம் இல்லையா? அரசு தரவேண்டிய கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பை, உணவுப்பாது காப்பைத் தனியாரிடம் அதிக விலைக்குப் பெறுமாறு மக்களை நிர்ப்பந்தித்து அவர்களைப் பட்டினியால் கொல்வது அரசு மக்கள் மீது ஏவும் பொருளாதாரப் போர் என்று ஏன் சொல்லக் கூடாது.

மோடி அரசைப் பொறுத்த வரை உழைக்கும் மக்கள் நாட்டின் வளங்களை உருவாக்கவில்லை. உழைப்பிற்குத் துளியும் தொடர்பில்லாத பெருமுதலாளிகளே நாட்டின் வளங்களை உருவாக்குகிறார்களாம். நாட்டின் வளத்தை உருவாக்கும் முதலாளிகளை மதிக்க வேண்டுமாம்! வளம் உருவாக்குபவர்களை சந்தேகத்துடனோ, தாழ்வாகவோ பார்க்கக் கூடாதாம்! வளம் ஆக்கபடவில்லையெனில் வளப்பங்கீடும் இல்லை. படைப்புகளை உருவாக்குபவர்களையே தான் தேசத்தின் வளமாகப் பார்ப்பதாகவும் மோடி உரையாற்றியுள்ளார். பெருமுதலாளிகள் எப்பேர்பட்டவர்கள்! சமூகத்தின் இலாபங்களை மட்டுமே தமதாக்கிக்கொண்டு, நட்டமோ இழப்போ ஏற்பட்டால் அதை சமூகமயமாக்கி விடும் தயாளர்கள்! சமூக சொத்துக்களை, வளங்களை, மனிதவளங்களின் உழைப்பை ஒட்ட சுரண்டுபவர்களையே தேசத்தின் வளர்ச்சியாளர்களென அப்பட்டமானதொரு பொய்யை பகிரங்கமாப் பரப்புரை செய்கிறது மோடி அரசு.

பெருமுதலாளிகளின் சமூகப்பொறுப்பு நெறிகளை (CSR) மீறுவது கிரிமினல் குற்றமாக கருதப்படாது. வளம் உருவாக்குபவர்களை மதிப்பதமாகவும் மரியாதை செலுத்துவதாகவும் நிதி அமைச்சர் கூறியுள்ளார். பெருநிறுவன சமூகப் பொறுப்பின் படி 2000 கோடிக்கு மேல் ஆண்டு வருமானம் கொண்ட பெருநிறுனங்கள் இலாபத்தில் 2% அளவிற்கு சமூக நலத்திட்டங்களில் செயல்படுத்த வேண்டும். இதை அவர்களின் கார்ப்பரேட் வரிகளின் மூலமாகவே கூடுதலாகப் பெற்று அரசே இந்தத் திட்டங்களை நேரடியாக செயல்படுத்தலாம்.

ஆனால் அப்படி செய்வதில்லை. ஏனென்றால் இந்த ஏற்பாட்டின் நோக்கமே பெருமுதலாளி கொள்ளையர்களை சமூக சேவர்களாகக்காட்டி சமூகத்தில் அவர்களின் மதிப்பை உயர்த்த வேண்டும் என்பது தான். என்ன தான் அரசு, கார்ப்பரேட்டுகளை சமூகப்பொறுப்புள்ளவர்களாகக் காட்ட முயன்றாலும்

அவர்கள் அவ்வாறு நடந்து கொள்வதில்லை, இலாபத்தைக் குறைத்து காண்பிக்கப் பல்வேறு உத்திகளைக் கையாள்கிறார்கள்.

இந்த திட்டத்தை செயல்படுத்துவதில் தொடர்ந்து பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுகிறார்கள். அவ்வாறு மோசடி செய்யும் பெருங்குழுமங்கள் யார்? பொருளியல் குற்றவாளிகள் தானே? குற்றத்திற்குத் தண்டனை விதிப்பது தானே முறை? அனால் அது குற்றமாகக் கருதப்படாது. நாட்டின் வளத்தை உருவாக்கும் கார்ப்பரேட்டு களை மதித்து மரியாதையுடன் கௌரவமாக நடந்து கொள்ள வேண்டும் என்றால் என்ன பொருள்? குற்றத்திற்குத் துணையாக ஆட்சியாளர்கள் இருப்போம் என்று தானே பொருள்? இப்படித்தானே இவர்கள் விஜய் மல்லையாவையும்,நீரவ் மோதியையும் மதிப்பு மரியாதையுடன் பாதுகாத்தார்கள்!

கார்ப்பரேட்டுகளின் துயர் துடைக்கப் பெருங்குழும வரி 30% லிருந்து 25% ஆகக்குறைக்கப்படும் என நிர்மலா சீதாராமன் உறுதியளித்துள்ளார். ஏற்கனவே இந்தாண்டு நிதி நிலை அறிக்கையில் 400 கோடி வரை வருமானம் பெறும் 99.3% கம்பெனிகளின் வரியை 25% குறைத்துள்ள நிலையில் மீதமுள்ள 0.7% பெருங்குழுமங்களின் கார்ப்பரேட் வரியையும் 30%லிருந்து 25%ஆக குறைக்கப்போகின்றனர். மொத்த கார்ப்பரேட் வரி வருவாயில் 80% இந்த 0.7% நிறுவனங்களிடமே பெறவேண்டிய நிலையில், அதில் 5% குறைத்தால் அதனால் 1.2 லட்சம் கோடி நிதி வருவாய் குறையும்.

நிதியமைச்சர் கார்ப்பரேட்டுகளின் குறைகளைச் சரிசெய்ய நாடு முழுவதும் பயணம் மேற்கொள்வதாக வாக்களித்துள்ளார். பெருங்குழும முதலாளர்கள் தங்கள் இருக்கையில் இருந்தவாரே குரல் கொடுத்தாலே அரசு செவிசாய்க்கும். நிதியமைச்சர் நேரடியாகச் சந்தித்து அவர்களின் குறைகள் அனைத்தையும் தீர்த்து வைப்பார். அவர்கள் அணிசேரவோ போராடவோ தேவையில்லை. காவல்துறையின் தடியடிக்கோ, கண்ணீர் புகைக்குண்டுக்கோ வேலையில்லை. தேசத்துரோக வழக்கிற்கோ, பொய் வழக்குகளுக்கோ இடமில்லை, ஏனென்றால் இது அவர்களின் அரசு.

உழைக்கும் மக்கள் தங்களின் நியாயமான கோரிக்கைகளுடன் எத்தனை முறை நாடாளுமன்றத்துக்குப் பேரணியாகச் சென்றாலும் அவர்களை மோடியோ, நிதியமைச்சரோ கண்டு கொள்வதே இல்லை. மக்களின் அமைதியான அறப்போராட்டங்கள் அனைத்து வழிகளிலும் கொடூரமாக அரசு வன்முறையால் ஒடுக்கப் படுகின்றன. எப்பேர்பட்ட முரண் இது! இங்கு நடப்பது மக்களாட்சி அல்ல, பெருமுதலாளிகளின் ஆட்சி என்பதே இந்த முரணின் பொருள். வேடிக்கை என்னவென்றால் இது நன்றாக புரிந்த போதும் மீண்டும் மீண்டும் படித்தவர்களே அவர்களுக்கு வாக்களிப்பது தான்.

மூலதனத்திற்கும் இலாபத்திற்கும், கூலி வீதத்திற்கும் இடையிலான ஏற்றத்தாழ்வு வரலாறு காணாத அளவிற்கு உச்சத்தில் இருப்பதே இந்தப் பொருளியல் நெருக்கடிக்கு அடிப்படைக் காரணமாக உள்ளது. கூலி வளர்ச்சி வீதம் மிகவும் குறைந்தால், தனிநபர் வருமானம் குறைந்து, சேமிப்பும் குறைந்துஒட்டு மொத்த நுகர்வுத் தேவையைக் குறுக்கியுள்ளது. 2017-ல் 176 ரூபாயாக இருந்த குறைந்தபட்ச அடிமட்டக்கூலியை வெறும் ரூ.2 மட்டும் உயர்த்தி ரூ.178 நிர்ணயித்த இந்திய அரசு, 44 தொழிலாளர் சட்டங்களை நான்கு தொகுப்புகளாக மாற்றி முத்தரப்பு பேச்சுவார்த்தை இல்லாமல், தொழிற்சங்கங்களை ஆலோசிக்காமல் முதலாளி களுக்கு சாதமாக அவசர அவசரமாக நிறைவேற்றிய இந்திய அரசு இந்தப் பிரச்சனையின் தீவிரத்தை கண்டு கொள்ளுமா?

இந்திய அரசு நிதிப்பற்றாக்குறையைக் கட்டுக்குள் வைப்பதாகக் கூறி பொதுத்துறை நிறுவனத்தின் பங்குகளை தனியார் மயப்படுத்துவதன் மூலம் 1.03 லட்சம் கோடி வருவாய் பெறவும், தலைமை வங்கியின் இலாபத்தைத் தனியார் நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கவும், கூடுதல் கடன்களுக்கு அந்நியக்கடன் சந்தையை நம்பியுள்ள நிலைதான் இன்றைய இந்திய திருநாட்டின் உண்மையான நிலை.

மேற்கண்ட விஷயங்கள் மூலமாகவும் டெல்லியில் 35 நாட்களுக்கு மேல் போராடும் விவசாய சங்கங்கள் வைக்கும் கோரிக்கைக்கு செவிசாய்க்காத மத்திய மோடி அரசு 100 சதம் முதலாளிகளின் அரசு என்று உறுதியாகின்றது. முதலாளித்துவ தத்துவத்தை கொண்ட அரசுகள் இதைத்தான் செய்யும் என்று நாம் அறிய வேண்டும். எனவே, நாம் சாமான்ய மக்களின் நலன் காக்கும் கட்சி எது என்பதை அறிந்து அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும். வாக்களிப்பவர்கள் சித்தாந்த தேடலை ஏற்படுத்த வேண்டும். இதற்கான மாற்று சிந்தனையும் மாற்று சித்தாந்தமும் தான் இன்றைய முக்கிய தேவையாகும். இதற்கு மாற்று சோசலிசமே மற்றதெல்லாம் ஏமாற்று என்று பறைசாற்றும் காலமிது.

**- தி. ஜெயசங்கர்**



# போராட்டங்கள் நிறைந்த 2020-ம் ஆண்டு

2020 ஆம் ஆண்டின் துவக்கத்தில் ஒரு ஊடக நிகழ்ச்சியில் 2020 ஆம் ஆண்டு எப்படி இருக்கும் என்று நெறியாளர் கேள்வி கேட்டார். நிகழ்ச்சியில் பலம்மிக்க ஆண்டாக இருக்கும், செழிப்பான ஆண்டாக இருக்கும், பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும், நினைத்தெல்லாம் கைகூடும் என்று கூறினார்கள். அவர்கள் சொன்ன ஒரு மாதத்தில் சீனாவின் யூகான் மாகாணத்தில் புதிய வகை வைரஸ் மக்களை தாக்கியது என்ற செய்தியும் அந்த வைரஸ் நோய்க்கு கோவிட் 2019, என்ற பெயரும் சூட்டப்பட்டது. யூகான் மாகாணம் சர்வதேச வியாபார சந்தையை பெற்றுள்ள காரணத்தினால் அங்கிருந்து உலக முழுவதும் பரவியது. உலக நாடுகள் கடும் துன்பத்திற்கு ஆளாகின. கொரானாவில் இருந்து தப்பித்து கொள்வதற்கான மாற்று மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் இந்தியா உட்பட பலநாடுகள் இறங்கியுள்ளது. உலக சுகாதார மையம் (WHO) இதுவரை எந்த மருந்தையும் அங்கீகரிக்கவில்லை, முயற்சிகள் தொடர்கிறது.

கொரானா வைரஸ் தாக்கத்தால் அனைத்து நாடுகளும் ஊரடங்கு பிறப்பித்து நோய் பரவாமல் இருக்க மக்களை பாதுகாக்க, உயிர் பலியை தடுக்க பல்வேறு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. மக்கள் கூடும் அனைத்து இடங்களுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மனிதனின் கடைசி புகலிடமான வழிபாட்டுதலம் (கடவுளின் இருப்பிடம்) கூட தடை விதிக்கப்பட்டது.

மக்கள் கூடினாலே நோய் பரவும், கைகுலுக்கினால் நோய் பரவும், சுவாசக்காற்று பட்டாலே நோய் பரவும் என்ற அபாயகரமான நிலையை மக்களுக்கு உணர்த்தி மக்களை பாதுகாக்க அரசுகள் முழு மூச்சுடன் ஈடுபட்டது. தனியார் மருத்துவ மனைகள் செயல்படாமல் முடக்கப் பட்டது. அரசு மருத்துவ மனைகள், கடவுள் வாழும் கோவில்களாக பாவிக்கப்பட்டது. அரசு மருத்துவ மனைகள் மற்றும் தனியார் கட்டிடங்களில் அரசு சேவையை விரிவாக்கம் செய்து மக்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. கொரானா காலத்திலும் தனியார் மருத்துவமனைகள் கொரானா பாதிப்பு சிகிச்சைக்கு பல லட்சம் ரூபாய் வரை வசூலித்து தனது லாபத்தை பெருக்கிக் கொண்டது. மனித நேயம் மறுத்து லாபமே கொள்கையாக கொண்டது முதலாளித்துவம்.

அனைத்து தொழிலும் முடக்கப்பட்ட நிலையில் மின்சார வாரியமும், மின்வாரிய ஊழியர்களும் முடங்காமல் தொடர்ந்து பணிக்கு வந்தார்கள். அனைத்து நிறுவன ஊழியர்களும் கொரானா தொற்று காரணத்தில் முடங்கிய போதும், மின்வாரியத்தின் களத் தொழிலாளர்கள், கணக் கீட்டுப்பிரிவு ஊழியர்கள், பிரிவு பொறியாளர்கள் உட்பட முடங்காமல் தைரியமாக தனது உயிருக்கு என்ற போதும் மக்களுக்கு சேவை செய்ய முன் வந்தனர். தடையில்லாத மின்சாரத்தை அளித்து மருத்துவமனைகள், கோவிட் முகாம்கள், அரசு அலுவலகங்கள் அனைத்தும் மின்சாரத்தை அளித்து சிறப்பான பங்காற்றினார்கள். அப்படி சிறப்பாக பணியாற்றிய மின்சார ஊழியர்களை மின்சார வாரியமும், தமிழக அரசும் அங்கீகரிக்கவில்லை என்பது தொழிற்சங்கங்களின் குற்றச்சாட்டு, தொழிலாளிகளின் குற்றச்சாட்டு,கொரானா காலத்தில் சுகாதாரத்தை, காவல்துறை

தூய்மை பணியாளர்கள் போன்ற துறைகளுக்கு வழங்கி சலுகை யை மின்வாரிய தொழிலாளர் களுக்கு வழங்கப் பட வேண்டுமென்று பலகட்டப் போராட்டங்கள் நடத்தினோம். அரசாணை 304-ஐ அமல் படுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். மின்வாரியம் ஏற்கவில்லை. அரசு ஏற்கவில்லை. இந்த போராட்டங் கள் தொழிலாளர்கள் மனதில் ஆறாத காயமாக நிலைத்து நின்று விட்டது. மின்துறை அமைச்சரை சந்தித்து மேற் கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பேசியபோது அவருடைய பதில் நமக்கு திருப்பதிகரமாக இல்லை, அவர் உறுதி யளித்ததும் நடை முறைக்கு வரவில்லை என்பதும் ஊழியர்களின் போராட்ட உணர்வு கூடுவதற்கு காரணமாக அமைந்தது.

இதே காலத்தில் ஆறு நிலக்கரி சுரங்கங்களை தனியாருக்கு விடும் டெண்டரை எதிர்த்து நாம் ஆதரவு ஆர்ப்பாட்டம் மாநிலம் முழுவதும் நடத்தினோம். அதே போல உ.பி. மாநில மின்வாரியத்தை தனியாருக்கு விடக்கூடாது என்று உ.பி. மாநில மின்வாரிய சங்கங்கள் தொடர் வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர் களுக்கு ஆதரவாக தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் எழுச்சியாக நடந்தது.

கொரானா தொற்று காரணமாக பஞ்சப்படி இல்லை, சரண்டர் விடுப்பு, அரசாணை வெளியிட்ட தேதிக்கு முன்பாக வேலை நிறுத்தம் செய்தது. உடல் ஊனமுற்ற தொழி லாளிக்கு விடுப்பு அளிக்காதது. கொரானா காலத்தில் போக்கு வரத்து வசதி இல்லாத காரணத்தினால் சிறப்பு தற் செயல் விடுப்பு அனுமதிக்காத காரணத்தினாலும் ஊழியர்கள், பொறியாளர்கள், அதிகாரிகள் வாரியத்தின் மிது அரசின் மீது கோபம் கொண்டு போராட்ட களத்திற்கு வருவதற்கு, பங்கேற் பதற்கு காரணமாக அமைந்தது. கருணை அடிப்படையில் பணி வழங்குவதில் தற்போதைய நிர்வாகம் கருணை இல்லாமல் நடந்து கொண்டு நூற்றுக்கும் மேற்பட்ட கோப்புகளை திருப்பி அனுப்பியது. புதிய பதவிகளை அனுமதிக்காமல் காலந் தாழ்த்தியது. காலி உள்ள பணி இடங்களை ஒழித்துக்கட்டியது. ஆட்குறைப்புகள் செய்தே தீருவேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயல்பட்டது போன்றவைகள் ஊழியர்களின் மனதில் கோபக்கனலாய் மாறியது. பங்கேற்பு அதிகமா வதை உறுதி செய்தது.

இதன் உச்சமாக 230 கே.வி.துணை மின் நிலையங் களை அவுட்சோர்சிங் விட்டது. கட்டுமான பிரிவுகளில் உள்ள உதவி பொறியாளர். உதவி செயற்பொறியாளர் பதவிகளை ஒழித்தது, மாற்று இடங்களுக்கு உத்திரவு வழங்கியது. லைன்ஸ் பிரிவுகள் அவுட்சோர்சிங் செய்தது. போன்ற நிர்வாக அதிரடி நடவடிக்கைகள் மூலம் ஊழியர்களை, பொறியாளர் களை, அதிகாரிகளை கோபம் கொள்ள செய்தது. போராடத் துாண்டியது. மேற்கண்ட நிர்வாக நடவடிக்கைகள் மூலமாக மின்வாரியத்தில் பிரிந்து கிடந்த தொழிற் சங்கங்களை ஒற்றுமைப்படுத்தி, வலிமைப் படுத்து தொடர் போராட்டங் களை நடத்திட வழிவகை செய்தது. நாம் இணைப்புக் குழுவோடு மட்டுமல்லாமல் தனியாகவும் போராட்டங்களை செய்து வாரியத்தை வலியுறுத்தி வந்தோம். இந்த நடவடிக்கைகள் மின்வாரிய ஊழியர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத் தியது.

இதன் உச்சக்கட்டமாக நவம்பர் 20 அன்று வாரியத் தலைவரை சந்திக்கின்ற ஒரு போராட்டமும், அதே நாள் மாலை மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்கள் முன்பாக மேற்கண்ட கோரிக்கைகளுக்காக மாலை நேர போராட்டம் நடை பெற்றது. மின்வாரிய தலைவர் அலுவலகத்தில் நடந்த போராட்டத்தின் விளைவாக மின்வாரிய டி.ஜி.பி (DGP ) அவர்களின் முயற்சியால் சமரச ஏற்பாடு செய்யப்பட்டு தொழிற் சங்கங்களை பேச்சுவார்த்தைக்கு அழைக்க ஏற்பாடு செய்வ தாகவும், வாரிய தலைவர் அதற்கு ஒப்புக்கொண்டதாகவும் சங்கங்களுக்கு தெவிக்கப்படவே அன்று நாம் கலைந்து சென்றோம். டிசம்பர் 3ந்-தேதி முதல் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டு டிசம்பர் 14 வரை பேச்சு வார்த்தை நடந்தது. பேச்சுவார்த்தை முடிந்த அடுத்த இரண்டாவது நாள் அதாவது டிசம்பர் 16-ம் நாள் வாரிய உத்திரவு எண் 82-ஐ வெளி யிட்டு நம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்கினார். மின் பகிர்மான வட்டங்களில் உள்ள கம்பியாளர். களஉதவியாளர் காலிப்பணி இடங்களில் 50 சதத்திற்கும் மேல் காலிப்பணி இடங்களாக உள்ள உபகோட்டத்தில் 20 ஒப்பந்த ஊழியர்களை பணிக்கு அமர்த்தி நாளொன்றுக்கு ரூ.412/

-ஐ கொடுக்கலாம் என்ற 86 பக்க உத்திரவு வெளியிட்டு வாரியத் தின் இதயதுடிப்பான மின் பகிர்மான பகுதியில் தனி யாருக்கு கொடுத்து விடலாம் என்ற எண்ணத்தில் இந்த உத்தரவு வெளியிட்டது. இந்த ஆபத்தை உணர்ந்த நாம் கூட்டுக்குழுவோடு இணைந்து காத்திருப்பு போராட்டம் செய்தோம். இந்த இயக்கத்தில் பெரும்பான்மைஊழியர்கள்,பொறியாளர்கள், அதிகாரிகள், உட்பட கலந்து கொண்டனர். காடம்பாறை, குந்தா, நீர்மின் உற்பத்தி பகுதிகளிலும் இந்த போராட்டம் வலிமையாக நடைபெற்றது. மேற்பார்வை பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் உட்பட பெரும்பான்மையான பொறி யாளர்கள் இதில் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொள்ளாத பி.எம். எஸ். சங்கத்தின் தலைவர்கள், அண்ணாப்பிரிவு தொழிற்சங்க தலைவர்கள் மட்டுமே. அந்த இரண்டு சங்கத்தில் உள்ள மொத்த உறுப்பினர்களும் போராட்டத்தில் கலந்து கொண்டது பாராட்டத்தக்க விஷயம். கூட்டுக்குழுவில் இல்லாத APPS, MAPPS, பாட்டாளி தொழிற் சங்கம், உட்பட இதில் கலந்து கொண்டது பாராட்டப்படக் கூடிய விஷயம். டிசம்பர் 21 அன்று காலை 9 மணிக்கு துவங்கிய இந்த போரா ட்டம் நண்பகல் 12 மணிக்கு உச்சத்தை எட்டியது. வாரிய தலைமை யகத்தில் உள்ள ஊழியர்களும், பொறியாளர்களும், உட்பட இதில் பங்கெடுத்துக் கொண்டார்கள். மின்துறை அமைச்சர் பகல் 12.00 மணிக்கு மின்வாரியத்திற்கு வருகை தந்தார். தொழிற்சங்கங்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். தொழிற்சங்க கூட்டுக்குழு அதை நிராகரித்து வாரிய ஆணை 82, மற்றும் ஐந்து 230 கேவி. அவுட்சோர்சிங் உத்தரவுகளை ரத்து செய்ய வேண்டும் என்றும், அதுவரை பேச்சுவார்த்தைக்கு இடம் இல்லை என்றும் வலியுறுத்தியது. மின்துறை அமைச்சர் நமது கோரிக்கையை ஏற்று வாரிய உத்தவு 82ஐ ரத்து செய்வதாக ஊடகத்திற்கு பேட்டி அளித்தார். அதன் பிறகு வாரியம் நீண்ட ஆலோசனைக்கு பிறகு நமது போராட்டத்திற்கு அடிபணிந்து 5 உத்திரவு களையும் ரத்து செய்து உத்தரவை வெளியிட்டது. இந்த போராட்டம் மத்திய, மாநில அரசுகளின் தனியார் துறைக்கு எதிரான கார்ப்பரேட் கம் பெனிகளுக்கு எதிரான போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளோம். மின்வாரியம் இனி தனியார்மய நடவடிக்கையை எடுக்காது என்று நம்புவோம்.

இவ்வாறு மின்வாரிய ஊழியர்கள் 2020 ஜனவரி 8-ம் நாள் அகில இந்திய வேலை நிறுத்தம் தொடங்கி 2020 டிசம்பர் 21-ந்தேதி வரை மாநிலந்தழுவிய காத்திருப்பு போராட்டம் வரை வெற்றிக் கரமாக நடத்திய போராட்டங்கள் நிறைந்த ஆண்டாக அமைந்தது. பல்வேறு அனுபவங்களை கற்றுத்தந்த 2020-ம் ஆண்டே சென்றுவா! புது உலகம் படைக்கும் புத்தாண்டே (2021) தவழ்ந்துவா!

- தி. ஜெயசங்கர்

## போராடும் விவசாயிகளை பிளவு படுத்தும் முயற்சிக்கு விவசாய சங்கங்கள் கண்டனம்.

வேளாண் சட்டங்களை திரும்பப்பெறக்கோரி போராடும் விவசாயிகளை பிளவுப்படுத்த மத்திய பிஜே.பி. அரசு முயற்சி செய்து வருகிறது. போராட்டத்தின் முதுகெலும்பாக இருந்திடும் பஞ்சாப் விவசாயிகள் இயக்கத்தை தனிமைப்படுத்திட மிகவும் கொடூரமான முறையிலும் அருவருக்கத்தக்க விதத்திலும் மோடி அரசாங்கம் பிரித்தாளும் சூழ்ச்சியை கையாளுகிறது.

தொழிற்சங்கங்கள் மற்றும் விவசாய சங்கங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள ஒற்றுமை கடந்த பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களிடையே உருக்கு போன்று உருவானதாகும். அதை பிரிக்க முடியாதென அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் ஹன்னன் முல்லா தெரிவித்துள்ளார்.

★ 2021 ஆம் ஆண்டு உறுப்பினர் இலக்கை இரட்டிப்பாக்குவோம்.....
★ ஆண்டு பேரவைகள் மார்ச் மாதத்திற்குள் நடத்தி முடிக்க வேண்டும்....
★ ஊதிய உயர்வு ஆலோசனை பட்டியல் தயாரித்து உடன் வாரியத்திற்கு அளித்து பேச்சு வார்த்தை நடத்த கோருவது...

# 12.12.2020 அன்று திருச்சியில் நடைபெற்ற கிளைச் செயலாளர் கூட்டமுடிவுகள்

மின் ஊழியர் மத்திய அமைப்பின் கிளைச்செயலாளர்கள் கூட்டம் நீண்ட இடைவெளிக்கு பின் நேரிடையாக திருச்சியில் 12.12.2020 அன்று நடைபெற்றது . மத்திய அமைப்பின் தலைவர் தோழர் தி.ஜெயசங்கர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதில் CITU மாநிலப் பொதுச்செயலாளர் தோழர் ஜி.சுகுமாறன் அவர்கள் கலந்து கொண்டு CITU தமிழ்மாநிலக்குழு முடிவுகள் மற்றும் மத்திய அமைப்பின் ஸ்தாபன பலத்தை உயர்த்த வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார்.


அதனையடுத்து மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் மின்வாரிய நிலை, வாரிய தலைவருடன் சந்திப்பு, 2020 உறுப்பினர் சந்தா, கிளை, கோட்ட செயல்பாடுகள், வரவு, செலவு தணிக்கை மற்றும் ஆண்டு பேரவைகள் தொடர்பாக அறிக்கையை சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கையின் மீது 39 தோழர்கள் விமர்சனம்,சுயவிமர்சனம் என்ற அடிப்படையில் கலந்து கொண்டு விவாதித்தனர்.

**கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.**

1. 2020 உறுப்பினர் பதிவை இம்மாத இறுதிக்குள் முடித்து 2021 ஜனவரி 10-ந்தேதிக்குள் மாநில மையத்திற்கு வந்து சேரும் வகையில் அனுப்ப வேண்டும்.
2. கிளை தணிக்கைக்கு ஒதுக்கப்பட்ட தணிக்கையாளரான மாநில நிர்வாகிகளை உடனடியாக தொடர்பு கொண்டு 2020 வரை கிளையின் வரவு,செலவுகளை தணிக்கை செய்யப்பட வேண்டும்.
3. 2021 மார்ச் மாதத்திற்குள் கிளையின் ஆண்டுப்பேரவை கிளைகளுக்கு ஒதுக்கப்பட்ட மாநில நிர்வாகிகளைக் கொண்டு நடத்தி முடிக்க வேண்டும்.
4. கோட்ட வாரியாக உறுப்பினர் பதிவை பராமரிக்க வழங்கப்பட்ட கையேட்டை கராறாக பயன்படுத்திட வேண்டும்.
5. 01.12.2019 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வு சம்மந்தமாக ஆலோசனைகள் இறுதிப்படுத்தப்பட்டு மாநில நிர்வாகிகளுக்கும், கிளைச் செயலாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதன் மீது ஆலோசனைகள் ஏதேனும் இருப்பின் 20.12.2020-க்குள் மாநில மையத்திற்கு எழுத்துப்பூர்வமாக அனுப்பிட வேண்டும்.
6. இறுதிப்படுத்தப்பட்ட கோரிக்கை பட்டியல் வாரியத்திற்கு கொடுப்பது. மாநிலம் முழுவதும் கிளைகள் கோரிக்கைப்பட்டியல் வெளியிட்டு நிகழ்ச்சியை நடத்திட வேண்டும். சென்னை தலைமையகம் முன்பு சென்னை வடக்கு, மத்தியசென்னை, ஆகிய கிளைகள் பங்கேற்கும் வகையில் நடத்துவது.
7. 2021 டைரி மற்றும் காலண்டர் கிளைகள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் ஜனவரி முதல் வாரத்திற்குள் அனுப்பி வைப்பது.
8. மாநில மையத்திலிருந்து கிளைகளுக்கு கிளை உறுப்பினர் பதிவேடு, வரவு,செலவு பதிவேடு ஆகியவை சந்தா ரசீது புத்தகங்களுடன் அனுப்பி வைக்கப்படும்.
9. ஏற்கனவே நாம் எடுத்த முடிவாக மத்திய அமைப்பின் பொன்விழா நிறைவு நிகழ்ச்சியை கொண்டாடாத கிளைகளில் விழா நடத்தி, மூத்த தலைவர்களை கௌரவித்து நடத்தப்பட வேண்டும்.

என்பன போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டன.



# மின்வாரிய கட்டமைப்பை உடைக்கும் மாநில அரசு

மனித குல வரலாற்றில் பிரிக்க முடியாதது மின்சாரம், நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் - விவசாயத்திற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் காரணியாக இருந்தது மின்சாரம். இது பொதுத்துறையாக இருந்த காரணத்தால் தான் இந்த முன்னேற்றங்களை அடைய முடிந்தது.

1991ல் புதிய பொருளாதாரக் கொள்கை அமலாக துவங்கிய பின்பு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுத்துறைகளை, கார்ப்ரேட் பெரு முதலாளிகள் தங்களின் வசப்படுத்த அனைத்து யுக்திகளையும் கையாண்டு வருகின்றனர்.

1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 84 சதவீதத்தை அடைந்து மின் உற்பத்தியில் சாதனை படைத்துள்ளது.

நவீன தாராளமய கொள்கையை மின்துறையில் அமலாக்கம் செய்யத்தான் மின்சார சட்டம் 2003ஐ நிறைவேற்றினார்கள். இந்த சட்டம் வரும் முன் மின்சார துறை சேவைத் துறையாக இருந்தது தற்போது லாப நட்டம் கணக்கு பார்க்கும் துறையாக மாறிவிட்டது. மறு சீரமைப்பு கொண்டு வரப்பட்ட பின் இலாப வேட்கையில் திளைத்து கொண்டு இருக்கும் கார்ப்ரேட் நிறுவனங்கள் மின்சார துறையில் தடம் பதித்து வேட்டையாட துவங்கின இன்று இந்தியாவின் மொத்த மின்உற்பத்தியில் 52 சதவீதம் தனியாரிடத்தல். இந்த நிலை நீடித்தால் மின்உற்பத்தி முழுவதும் தனியாரிடம் செல்லும் நிலை உருவாகும். தற்போது விநியோகத்திலும் போட்டி போட ஆரம்பித்து விட்டார்கள்.

இதன் விளைவு மின்சாரம் சந்தைப் பொருளாக மாறி பணம் உள்ளவனுக்கே மின்சாரம் என்ற நிலை உருவாகும்.

மறு சீரமைப்பு என்ற பெயரால் மின்சாரத்தை அதிக விலை கொடுத்து வாங்கி மின்வாரியங்கள் குறைந்த கட்டணத்தில் கொடுப்பதால் இழப்பை சந்திக்க வேண்டியுள்ளது. இந்த இழப்பு தான் தமிழக மின்சார வாரியத்தின் மோசமான நிகழ்வாக நடவடிக்கையால் இன்றைக்கு 1.60 லட்சம் கோடி கடன் சுமை ஏற்பட்டுள்ளது. அதோடு தனியார் மின்உற்பத்தியாளர்களுக்கு அள்ளிக் கொடுத்ததின் விளைவினால் இந்த கடனை மின்வாரியம் சந்திக்க நேரிட்டது.

அதானி சோலார் பவர் கார்ப்பரேஷனிடம் ஒரு யூனிட் மின்சாரம் 7.01 பைசாவிற்கு 21 ஆண்டுகளுக்கு 680 மெகாவாட் மின்சாரத்தை கொள்முதல் செய்ய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் சென்னை வல்லூரில் மத்திய அரசும் மின்வாரியமும் உள்ள NTPCL உற்பத்தி நிலையத்தில் 1500 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய ஒரு யூனிட் ரூ. 4.50 மட்டுமே ஆகிறது. ஆனால் மின்சார வாரிய நிர்வாகம் இங்கு முழு அளவில் மின்சாரத்தை பயன்படுத்துவதில்லை.

தரமற்ற நிலக்கரி கொள்முதல் செய்யப்படுகிறது இதன் விளைவு மின்உற்பத்திக்கு அதிக செலவு ஏற்படுகிறது என்ற காரணத்தை காட்டி அனல் மின் உற்பத்தியை நிறுத்தி நீண்ட கால கொள்முதல் மூலம் தனியாரிடம் மின்சாரத்தை வாங்க முடிவு செய்கிறார்கள். இப்படி தனியாரிடம் மின்சாரத்தை வாங்குவது சிலருக்கு லாபத்தை அளிக்கலாம். ஆனால் ஒட்டு மொத்த மக்களின் வரிப்பணத்தை இவர்கள் வேட்டையாட அனுமதிக்க முடியாது.

தரமற்ற புதிய எலக்ட்ரானிக் மீட்டர்,

ஸ்மார்ட் மீட்டர், மின்மாற்றியில் கெப்பாசிட்டர், Rmu என்று சொல்லக் கூடிய பிரேக்கர் ஆகியவற்றிக்குதேவையற்ற பணத்தை வாரி வழங்குகிறார்கள். Rmu உள்ள relay-வின் விலை ரூ. 35,000/-க்கும் மேல் கிடைப்பதில்லை. Rmu பல இடங்களில் பயன்படுத்த முடியாமல் ஊழியர்கள் அச்சத்தோடு பணியாற்ற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மின்விநியோகத்தை தனியாரிடம் கொண்டு செல்ல எடுக்கப்பட்ட முடிவு தான் வாரிய ஆணை 82ம் துணை மின்நிலையங்களை பராமரிக்க அவுட்சோர்சிங் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. தனியார் மயத்தின் மோகம் ஆளும் ஆட்சியாளர்களை மட்டுமல்ல அரசு உயர் அதிகாரிகளையும் கவர்ந்துள்ளது. ஆகவே தான் நிரந்தரத் தன்மை வாய்ந்த இந்த பணிகளில் ஒப்பந்த அவுட்சோர்சிங் முறைக்கு தள்ளப்படும் திட்டம் என்பதை மின்வாரிய ஊழியர்கள் உணர்ந்துள்ளனர். ஆகவே தான் இந்த உத்திரவை திரும்ப பெற நடத்திய போராட்டம் தான் டிசம்பர் 21.

தமிழக அரசியலில் ஆட்சி மாற்றத்திற்கு மின்சாரத்திற்கு பெரும் பங்கு உண்டு ஆகவே சிதைக்காதீர்கள் மின்வாரியத்தை! வரலாற்றை திரும்பி பாருங்கள் ஆட்சியாளர்களே!

---

# கோதையார் கோட்டம் மின்நிலையம் I ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெற்றதை அடுத்த ஊக்கபரிசு வழங்க கோரி கடிதம்

நாள்: ***15.12.2020***

பெறுநர்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002
ஐயா,

வணக்கம்

பொருள் : திருநெல்வேலி உற்பத்தி வட்டம், கோதையாறு கோட்டம் மின் நிலையம்-1 - 50 ஆண்டுகள் நிறைவு செய்தது தொடர்பாக

திருநெல்வேலி மின் உற்பத்தி வட்டத்திற்குட்பட்ட கோதையாறு மின் நிலையம்-1 உற்பத்தியை துவக்கி கடந்த 09.12.2020 அன்று 50வது ஆண்டை நிறைவு செய்கிறது. இந்த மின் உற்பத்தி நிலையத்தில் கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களால் பழுது ஏற்பட்ட நேரங்களில் இந்த துணை மின் நிலையத்தில் பொறியாளர்கள், ஊழியர்கள், இணைந்து பணியாற்றி விரைந்து மின் உற்பத்தியை செய்து வந்துள்ளார்கள். லாபத்தையும் ஈட்டிக் கொடுத்துள்ளனர்.

கடந்த காலங்களில் பல்வேறு நிகழ்வுகளில் இதுபோன்ற ஊக்கப் பரிசுகள் வழங்கி ஊழியர்களை பொறியாளர்களை ஊக்கப்படுத்தியுள்ளார்கள் என்பதையும் தங்களது கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம். எனவே, இதில் பணியாற்றிய ஊழியர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு ஊக்கப்பரிசு வழங்கிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்

# விருப்ப மாறுதல் விண்ணப்பம் அளிக்க சில அறிவுரைகள்

TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION
(Administrative Branch)

144, Anna Salai,
Chennai - 600 002.

Memo.No.104992/1176/G43/G431/2020-3, dated: 29.12.2020.

Sub : Establishment – Request Transfer Applications – January 2021 – Further instructions issued - Reg.

Ref :
1. (Rt.) CMD/TANGEDCO Proceedings No.5, (Administrative Branch) dated 28.06.2017.
2. This office Memo.No.104992/1176/G43/G431/2017-2, dated:14.07.2017.
3. This office Memo.No.104992/1176/G43/G431/2017-3, dated:03.1.2018.
4. Memo.No.104992/1176/G43/G431/2017-4, dated: 30.06.2018.
5. Memo.No.104992/1176/G43/G431/2017-5 dated: 29.12.2018.
6. Memo.No.104992/1176/G43/G431/2019-2 dated: 29.06.2019.
7. Memo.No.104992/1176/G43/G431/2020-1 dated: 27.12.2019.
8. Memo.No.104992/1176/G43/G431/2020-2 dated: 29.06.2020.

-------

In continuation with orders issued vide reference (8) above, the following instructions are issued for the registration of the request transfer applications.

(i) The existing transfer guidelines as prevailed before 28.6.2017 shall be continued to be followed.

(ii) As already noted in reference (4) transfer applications are valid for that particular half year only. As such application submitted through portal during July 2020 becomes invalid if not effected on or before 31.12.2020. Accordingly all pending RTAs registered during July 2020 in all categories will be cancelled.

(iii) Fresh request transfer applications for 1.1.2021 are to be submitted through **online**. Necessary guidelines for registration through online are available at the web-site address:**RTA ~ URL http://192.168.160.75/openbd/RTAJAN21/** . Also, a hard copy of RTA is to be submitted to the competent authority alone. The portal will open from 1.1.2021 at 10.30 Hrs and close on 20.1.2021 at 17.15 hrs. No further extension will be granted in view of holidays as applications are to be submitted only through on line before the due date.

(iv) The designated authority shall arrange to furnish the Performance Assessment Report of the individual through online in the same portal within 1 week from the last day for submission of application . If Performance Assessment Report of the individual is not updated before the specified time, the details as furnished by the applicant as available at the office of the competent authority to be taken in to account and orders to be issued

(v) During online registration, any fraudulent act such as registering in other's name and GPF no. will be viewed seriously and DP will be initiated against such persons.

(vi) The General guidelines already issued in reference (4) cited are to be followed for Online registration.

The above instructions are to be strictly adhered to by the staff and officers of TANGEDCO/TANTRANSCO for easy process of their request transfer applications.

The competent authority to effect transfer can act based on the physical copy in case of difficulty in feeding data through online.

**(D.RAVICHANDRAN)**
CHIEF ENGINEER/ PERSONNEL

பத்திரிக்கைகளின் பார்வையில்.......

# ஒன்றுபட்ட மின்ஊழியர்கள் ஆவேச போராட்டம்

## மின்வாரியத்தில் தனியார் மூலம் ஊழியர்களை நியமிக்கும் உத்தரவு ரத்து

அமைச்சர் பி.தங்கமணி தகவல்

## மின் ஊழியர் போராட்டத்திற்கு பணிந்தது தமிழக அரசு

மின் ஊழியர் போராட்டத்திற்கு பணிந்தது தமிழக அரசு

தனியார் மூலம் ஊழியர்களை நியமிக்கும் அரசாணை ரத்து: அமைச்சர் தங்கமணி அறிவிப்பு



## Tangedco staff protest against plan to outsource operations

The government will never privatise electricity public utility, says Minister

SPECIAL CORRESPONDENT
CHENNAI



P. Thangamani

A section of workers of the Tamil Nadu Generation and Distribution Corporation (Tangedco) on Monday went on protest demanding the cancellation of outsourcing of operation and maintenance of substations and filling of vacancies for maintenance posts.

Against the backdrop of the protest, Electricity Minister P. Thangamani told journalists that the State government would never privatise electricity operations. The government had taken steps to withdraw the proposal to outsource the operation and maintenance of substations and fill the vacancies in the sub-division offices, he added.

Employees affiliated to various unions, including the TNEB Engineers' Union, the LPF and the CITU organised protests in front of electricity offices in Chennai, demanding that power operations and maintenance not be "privatised". Protests were also held by employees at the headquarters of the Tangedco on Anna Salai.

S. Manoharan, president, TNEB Engineers Union, said the protests were held against the proposal of Tangedco to outsource maintenance operations in various sub-divisions and entrust the substations to private players. The protest was also held demanding that the administration fill the more than 40,000 vacancies in the field staff category a[...] er the State.

Despite protests, [...] were not many complai[...] the operation and ma[...]nance of electricity dis[...]tion in the city, Tange[...] senior officials said.

The Minister, how[...] blamed the unions for [...] to the Madras High Co[...] stop the recruitment o[...] 10,000 people for the [...] gangman. He said the [...] government had tak[...] steps for the recruit[...] The Electricity Depar[...] was willing to hold talk[...] the unions but the[...] were not willing to co[...] talks, he added.

## மின்வாரியத்தில் ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்புப் பணி: உத்தரவைத் திரும்பப் பெறுவதாக அமைச்சர் அறிவிப்பு



### உத்தரவை திரும்பப் பெற்றது வாரியம்

## மின் வாரியம் தனியார்மயமாகாது அமைச்சர் தங்கமணி திட்டவட்டம்

### மின் கட்டண மையம் முடக்கம்



### போராட்டம்

### தவறான வழி

## மின்வாரிய காலி பணியிடங்களை தனியார் மூலம் நிரப்புவதற்கான ஆணை ரத்து

## தமிழக மின்வாரியம் தனியார்மயம் ஆக்கப்படாது

மின்துறை அமைச்சர் தங்கமணி திட்டவட்டம்




ஒன்றுபட்ட போராட்டத்திற்கு பணிந்தது வாரியம்
பெரம்பலூர்
திருப்பத்தூர்
விழுப்புரம்
சிவகங்கை
திருநெல்வேலி
வேலூர்
35


Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2021 - 2023
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2021 - 2023
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 09.01.2021











கோவை
மேற்பார்வை பொறியாளர்
அலுவலகம் முன்பு

Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.
Editor S.S.Subramanian